பதிவு எண் 2041 கதர் வாழ்க! தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா, வெளி நாடு 1½ அணா






| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, | ... | ரூ 1-12 |
| வெளி நாட்டிற்கு ,, | ... | ரூ 4—0 |

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 8.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 3 | ஈரோடு, பிரபவ ஸ்ரீ கார்த்திகை மீ 19உ. (4—12—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 32



## கணித சோதிடம்

பரகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று மிகவு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916ஸ்ரீ ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சிர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும் தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

## திருப்பூர் கதர் பனியன்கள்.

குளிர்காலத்துக்குத் தகுந்த உபயோகமானவைகள்.

நம்மிடம் உறுதியானதும் நீடித்து உழைக்கக்கூடியதுமான சுத்த கதர் பனியன்கள் கிடைக்கும்.

விலை டஜன் 1-க்கு

28 இஞ்சு 7-14-0 30 இஞ்சு 8-4-0, 32 இஞ்சு 8-10-0 34 இஞ்சு 9-0-0.

உடனே வேண்டிய பனியன்களுக்கு ஆர்டர் செய்யுங்கள். இன்னும் மற்ற எல்லா விதமானகதர்ஜவுளிதினுசுகளும் கிடைக்கும். விலை விபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

M, V. கருப்பண்ணசெட்டியார், திருப்பூர், (தென் இந்தியா)

## கதர்ப் பத்திரிகைக்கு

வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம்

அல்லது

8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டு இலாகாவாகிய எங்களால் மாதம் இரு முறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய

### "குடி நூல்"

என்ற கதர்ப்பத்திரிகையின் வருட சந்தா ஏழை ஜனங்களின் உபயோகத்தை முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

அகில இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லாவிவரங்களும் கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப்பட்ட வியாசம், கதை, கவிதை முதலியவைகளும் குடி நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது கதரியக்கத்தில் பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,
சர்க்கா சங்கம், ஈரோடு.

## தஞ்சாவூர் சப் கோர்ட்டார் அவர்கள் சமுகத்திற்கு.

த. S. C. கோர்ட்டு 1922 ஹூ S. C. No. 547,

ருமநாதன் செட்டியார் ... ... வாதி.

நடேசய்யர் ... ... ... பிரதிவாதி.

1908ஹுத்திய V-வது ஆக்ட் XXI ஆர்டர் 11 (2) ரூலின்படி மனுஷி வாதி அடியில் கண்டபடி தெரிவித்துக் கொள்ளுகிறதாவது.

நிறைவேற்ற மனு,

| | |
|---|---|
| கோர்ட்டு வருஷம் நெ. | த. S. C. கோர்ட்டு S. C. No. 547/22. |
| வாதி பெயர். | வாதி இப்போது தஞ்சாவூர் கீழ வீதியிலிருக்கும் சுப்பிரமணியன் செட்டியார் குமாரர் ருமனுதன் செட்டியார். |
| பிரதி வாதி பெயர். | பிரதிவாதி இப்போது கொளும்பில் 8 நிர். செபஸ்தியான் மலேயில் இருக்கும் கோதண்டருமய்யர் குமாரர் தேசநேசன் நடேசய்யர். |
| டிகிரியின் ஹூ மீ உ | 9—8—22-ல் தீர்ப்பு. |
| அப்பீலான விபரம் | Nil. |
| ஒழுங்கின் விபரம் | |
| முன் நிறை வேற்றிய | I. இந்த நம்பர் டிகிரி நகல் வகையறுவை தஞ்சவூர் டி. மு. கோர்ட்டு அசல் சைட்டுக்கு டிரான்ஸ்பர் செய்ய 15—7—25உ மனு கொடுத்து வாப்பஸாகி வாபஸ் வாங்காமல் மனு தள்ளுபடி |
| டிகிரி தொகை விபரம் | டிகிரி தொகை ரூ. 373—8—0<br>அதற்கு 23—1—22 முதல் 9—8—22 வரையில் மீ 1க்கு 100-க்கு 2-0-0 வீதம் வட்டி ரூ. 48—8—0<br>422—0—0<br>டிக்ரியில் கண்ட செலவு ரூ. 45-12—0<br>ஆக ரூ. 467-12—0<br>அதற்கு 9—8—22 முதல் நாளது தேதிவரைக்கும் மீ 1-க்கு ரூ. 0—8—0 வீதம் வட்டி ரூ. 148—7—0<br>ஆக ரூ. 616—3—0<br>டிகிரி நகல் சிலவு ரூ. 1—5—0<br>முதல் மனு வக்காலத்து பீஸ் ரூ. 3-12—0 |
| சிலவு தொகை விபரம். | 8—9 கலம் மொத்தம் 22—11—27 வரையில் பாக்கி 621—4—0 |


உறையூர்

## சரிகை அங்கவஸ்திரங்கள்.

—:o:—

சரிகைக்கு காரண்டி, உடை நயம்.

அசல் 100 நெம்பர் நூலில் சொந்த கைத்தறி நெசவு தினப்படி உபயோகத்திற்கு ஏற்றதாயும், நாகரீகமாகவும் உள்ள பட்டுக்கரை சரிகை முந்தி 2¾ அகலம் 5 முழம் அங்கவஸ்திரங்கள், 1 நெ. 1-க்கு ரூபாய் 2—2—0. | 2 நெ. 2—6—0
3 நெ. 2-10—0. | 4 ,, 3—0—0
5 ,, 3—8—0. | 6 ,, சரிகை சீர் 1—14—0. 7 நெ. சாதா கம்பி 1-12-0
200 நெ. ஷி அகலம் முழம் உள்ளது பட்டுக்கரை சரிகை முந்தி அங்கவஸ்திரம் 1க்கு ரூபாய் 3—8—0 முதல் ரூபாய் 6—0—0 வரையில் உண்டு. சரிகை கரை சரிகை முந்தி உள்ளது ரூபாய் 6 முதல் 20, 25 வரையிலும் உண்டு. மற்றும் பேட்டாகங்களும் 3 அகலம் ஜோடிகளும் உண்டு. ஆர்டர் செய்யும்போது கருப்பு, சிகப்பு கரை அல்லது முந்திகளில் சீர் இன்னது இருக்கவேண்டும் என்பதாக எழுதக் கோருகிறோம்.

N. B:-மலாய் நாட்டில் கமிஷனுக்கு ஏஜண்டுகள் தேவை. விபரத்திற்கு எழுதக் கோருகிறோம்.

வி. பி. தபால் பாக்கிங் சார்ஜ் வேறு.

விலாசம்:—

மானேஜர்,
ஸ்ரீ சௌடாம்பிகா
ஜவுளி வர்த்தகசாலை,
உறையூர் P. O. திருச்சி.


## "குடி அரசு" நிருபர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

நிருபர்கள் "குடி அரசு"ப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய கட்டுரைகளையும் செய்திகளையும் சுருக்கமாகவும், தெளிவாகவும், காகிதத்தின் ஒரு பக்கத்தில், இடது ஓரத்தில் ஒரு அங்குல இடம்(மார்ஜின்)விட்டு, வரிகளுக்கு இடையில் குறைந்தது அரை அங்குல இடம்விட்டு எழுதியனுப்புவதுடன் தங்கள் முழுவிலாசத்தையும் தெரியப்படுத்த வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தனிப்பட்ட நபர்களைக்குறித்து அனுப்பப்படும் கண்டனங்களும் வார்வம்பு விஷயங்களும் பிரசுரிக்கப்படமாட்டா. பிரசுரிக்கப்படாத விஷயங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

சந்தாதாரர்கள் எழுதும் கடிதங்களில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதக்கோருகிறோம். நிற்க, சந்தாதாரர்களில் சிலர் தங்களது சந்தா காலம் தீர்ந்தும் பணம் அனுப்பாமலிருப்பதால் அவர்களுக்கு வி. பி. அனுப்பியிருக்கிறோம். நண்பர்கள் அவைகளை கௌரவித்து 'குடி அரசை' ஆதரிக்கவேண்டுகிறோம்.

மானேஜர்,

# மதுவும் நாடார்களும்.

(கைவல்யசாமியார் எழுதுவது)

"மது உற்பத்தி செய்வதினாலும் அதில் சம்மந்தப்பட்டிருப்பதினாலும் சான்றார்களை சிலகோவில்களில் விடப்படுவதில்லை என்று சிலர் நியாயம் சொல்லுகிறார்கள். நியாயம் அழகாயிருந்தாலும் உண்மைத்தத்துவம் அவர்கள் சொல்லுவது போல் இருக்கக்காரணமில்லை. மலையாளத்தில் முக்கிய கோவில்களில் பாப்பான் நாயர் தவிர எந்த எந்த ஜாதி இந்துக்களையும் விடுவதில்லை. சைவன், முதலி, நாயுடு முதலிய உயர்ந்த ஜாதி கள்ளு உத்திபத்தி செய்கிறதா? இல்லை என்றாலும் கோவிலுக்குள் விடப்படுவதில்லை, இது ஆட்க்ஷேபிக்கப்பட்டு நற்சாட்சிப்பத்திரத்துடன்போனால் கோவிலுக்குள் விடப்படுகிறார்களாம். ராமனாதபுரம் ராஜா திருவனந்தபுரம் கோவிலுக்குள் போய் வந்தவுடன் கோவிலை சுத்தம்பண்ணினார்களாம். மருமக்கத்தாய முறையவர்கள் ராமேஸ்வரக் கோவிலுக்குள் போக ஒரு ரூபாய் காணிக்கை கொடுக்கவேண்டும். மருமக்கத்தாயமென்பது மலையாளத்தில்தான். பாப்பானும் நாயரும் சம்மந்த வகையில் ஒத்திருப்பதால் பாப்பானும் நாயரும் தவிர மற்ற ஜாதிக்காரர்களை அந்த ராஜ்ஜியத்தில் தாழ்மையாக நினைக்கிறார்கள். தமிழ் நாட்டில் நாயுடுகளின் ராஜ்ய ஆதிக்கமிருந்த காலத்தில் நாடார்களுடைய பதவி பொருள் முதலிய காரணத்தால் துவேசித்திருக்கலாம். ஒரு ஜாதி செல்வாக்கடையும்போது இன்னொரு ஜாதியை தாழ்த்துவது நம் நாட்டில் நடைபெற்று வந்தேயிருக்கிறது. இப்பொழுதும் விபூதிச்சண்டையும், தேங்காய் முன பின் உடைக்கும் தகராரும், முன் படிக்கட்டு பின் படிக்கட்டு பாத்யதைச்சண்டையும், இப்பொழுதும் இழிந்த அற்பபுத்தியாகவிருக்கிறது. நாடார்கள், பூர்வீகத்தமிழர்களாகவும் செல்வாக்குடையவர்களாகவும் இருந்தார்கள் என்பது மெய்யே. நாடான், நாட்டான், நாட்டவன் என்பதெல்லாம் ஊரான் என்னும் அர்த்தத்தையே உடையது. ஊரான் என்னும் பெயர் யார்க்குண்டோ அவர்களுக்கு எல்லாபாத்திதையும இருந்தே தான் அந்தப்பெயர் வந்திருக்கும். தென்னை, பனைமரம் ஏறும் தொழில், விவசாயத்தையும் கைத்தொழிலையும் பொருத்தது. நம் நாட்டிற்கு அநேககாலமாக தென்னையும் பனையுமே வீடுகட்ட உதவி வருகிறது. அதில்லாமல் போனால் நம் குடியிருப்பு கடவாது. அவற்றால் உண்டாகும் நார் நமக்கு இன்றி அமையாதது. நார் முன் அந்நிய நாட்டுக்குப் போனதாகவும் தெரிகிறது. கரும்புக்கு முன்னே பனை தென்னை சர்க்கரையே இருந்திருக்க வேண்டும். தேங்காயும், பனை நொங்கும், கிழங்கும் நமக்கு ஆகாரம். தேங்காயில்லாமல் தேவபூஜையில்லை. பனை ஓலையே முன் காலத்துப் படிப்பும் சாஸ்திர ஏடுமாகும். தென்னையும் பனையும் நம் வாழ்க்கைக்கும் நம் தேசத்திற்கும் பெரும் சொத்து. இதனால் தான் இதற்கு கற்பக விருட்சமென்றும் சொல்லப்படுகிறது. ஆகாசத்தை யளாவிய இந்தமரத்தின் நுனியிலல்லவா இத்தனை பலனுமிருக்கிறது. அது எப்படி கீழே வரும். ஒரு அண்ணன் மரம் வைத்து வளர்த்தான். ஒரு தம்பி மேலேறி பலனைக் கீழே கொண்டுவந்தான், மற்றொரு தம்பி கொண்டு வந்த பலனை பாகுபண்ணி பலருக்கு விற்றான். இதுவே இதன் உண்மை. தவிர இதில் யாதொரு ஏற்றத் தாழ்வுமில்லை.

ஜனங்களுடைய பொதுவான தொழிலாளித்தனத்திற்கு ஜாதி என்று பெயர். அது ஜனங்களுக்குப் பெரிய விபத்தாய்க் கொண்டு வருகிறது. ஏனெனில் அதில் மிகுந்த லாபமுண்டாகிறது. எனவே உயர்ந்த ஆதர்சங்களின் நியதிகளிலே மனிதருக்குப் பொறுமையில்லாது போகிறது. லாபம் எவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவு ஸ்வார்த்தகம் பொறாமை விரோதம் இவற்றின் அல்லல் பலமடைகிறது. இவை மனிதர்களின் லாபத்தால் விளைகின்றன. மனிதன் கோபதாப சமயத்திலும் யோசனை பண்ணுவதுண்டு. ஆனால் ஒரு கூட்டத்தின் உணர்ச்சியுடன் கலக்கும்போது யோசனை செய்வதில்லை. அவனுடைய தர்மப்புலன் மழுங்கிப்போகிறது. கூட்ட மனங்களில் உயர்ந்த மனிதத்தன்மையை நசுக்கி விடுவதனால் மிகுந்த பலமுண்டாகிறது. ஏனென்றால் கூட்டப்புத்தி இயல்பில் அநாகரீகமானது. இந்த இருளின் பெரிய வலிமை ஜாதி தனக்குப் பயன் படுத்திக்கொள்வதில் ஜாக்கிரதையாக விருக்கிறது. நாட்டில் உயர்ந்த ஜாதி என்று சொல்லிக்கொள்ளும் கூட்டமுழுவதும் சேர்ந்து யாதேனுமொரு குறுகிய நோக்கத்திற்கு தம்மைப் பயிற்சி செய்து கொண்டதினால் பிறகு அதையே தளராமல் காத்து போதனை செய்தல் அந்தக் கூட்டத்திற்கு லாபமாகவோ பெருமையாவோ அவசியமாகவோ நினைத்து விடுகிறது. ஒரு சமூக முழுதையும் குறுகின ஆதர்சப்படி பயிற்சி செய்வதே ஜாதீயக்கொள்கை. இது நமது நாட்டில் நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது. இதில் அவர்களின் மனம் பற்றியிருக்கும் போது தர்மக்குறைவும் குருட்டறிவும் விளைவிக்கிறது. அந்த சமயம் தன் லாபமும் செருக்கும் தான் கொண்டிருக்கிறது. இந்த சமயம் கல்வியும் ஆராச்சியும் சிறிது பரவ ஜாதி கட்டுப்பாடு நீங்கிவருகிறது. ஒரு நோய் மூளையைத் தாக்கும்போது அது மிகவும் கடுமையாயிருக்கிறது. ஏனென்றால் எல்லா விதமான வியாதி சக்திகளையும் இடைவிடாமல் முற்றுகை போடுவது மூளையேயாம். அது போல ஜாதீயத்தன்னலக் கொள்கையின் உள் நிலை எல்லோருடைய சுயமரியாதையையே தாக்கிக்கொண்டிருக்கின்றதென்று இப்பொழுது உணர்ந்து விட்டார்கள். பல காரியங்களிலுள்ள துன்பமும் அவமானத்தின் சக்தியும் சுயமரியாதையென்னும் மனிதத்தன்மையை முற்றுகை போடுகிறது. எல்லா தேசங்களிலும் சுயமரியாதையோடு வாழும் திருநாளுக்கு தெய்வம் நம்மையும் கூப்பிடுகிறது. அதனால் சுயமரியாதையின் எண்ணம் நமக்குண்டாகிறது. பூசாரிதடுக்கிறான். பூசாரிதடுக்க நம்மிடம் கொடுக்கலாமா என்று கேட்பதற்குக்கூட யாருக்கும் அதிகாரம் இல்லை என்பது சாஸ்திரத்தின் நிச்சயமாம். கழுதை, நரி, முயல் இதன் வயிற்றில் பிறந்த ரிஷிகூட இந்த சாஸ்திரத்தை எழுதியிருக்கமாட்டார். ஏனென்றால் அதன் வயற்றில் பிறந்த ரிஷியும் மனித ரூபத்துடனே பிறந்திருக்கிறார்கள். சிறிது பணக்காரன் வந்தால் பூசாரி பல்லைக்காட்டுகிறான். தன்னையும் தன் சாஸ்திரத்தையும் மதிக்காத அன்னிய மதஸ்தனின் ஆதிக்கத்திற்குப் பயந்து உடனே பூசாரி சாஸ்திரத்தை எல்லாம் கட்டிவைத்து விட்டு அவன் பாதத்தாளியை நக்கி சென்று அவனுக்கு எல்லா ஊழியமும் செய்கிறான். சுயமரியாதைத் திருவிழாவை நடத்தும் கடவுளுக்குக் கண் குருடில்லை. இப்படிப்பட்ட வேற்றுமைகளை அவர் பொறுக்கமாட்டார். உள்ளத்தில் பாவம் வெட்கமாகவந்து சுடாவிட்டாலும், வெளியே தெய்வகோபமாக வந்து சுடுகின்றது. தென்னாப்பிரிக்காவிற்குள் நம்மை விடாததும் ராயல் கமிஷனில் சேர்க்காததும் நம்மவர்களில் முக்கியமானவர்களில் சிலர் "மூட்டை தூக்க ஆளாகவாவது சேர்ந்து கொள்ளுகிறோம். அந்தப்பெருமை இருந்தாலே எங்களுக்குப் போதும். நாங்கள் அதைக்கொண்டே எங்கள் ஊரார்களை ஏமாற்றி பெருமைபாராட்டி பிழைத்துக் கொள்ளுவோம்" என்று சிலர் வெள்ளைக்காரர்களைத் தாங்கி நடந்தும் ஒரு பதவியும் கிடைக்காமலிருப்பதுவும் தெய்வம்போடும் பாவச்சூடு.

இனி கள்ளைப்பற்றி ஆழ்ந்து கவனிப்போம். பனஞ்சாறு தென்னஞ்சாறு சர்க்கரைக்காக உண்டாக்கப்பட்டதிலிருந்து தான் கள் உண்டாக்கப்பட்டிருக்கவேண்டும். உலக சுக போகங்கள் விருத்தியானால் மனதை உற்சாகப்படுத்தக்கூடிய மயக்க வஸ்துவும் பண்டு காலந்தொட்டே ஜன சமூகங்களைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. பிராண்டியைப் பரப்புவதற்காக பேப்பர்கள் உண்டாகவில்லை. லாபத்தைக் கருதி பரப்புவதை விடுவதுமில்லை. தென்னை, பனை ஏறுந்தொழில் கள் விற்பதற்காக உண்டாகவில்லை. லாபத்தைக் கண்டவிடத்து அதை விடமுடியவில்லை. கள் கெட்டதுதான். அந்த கள்ளின் சம்மந்தத்தால் நாடார்களைவிட மற்றவர்கட்கும் எதிலும் பாத்யதை அதிகமென்று சொல்லுவதற்கு ஞாயமில்லை. நாடார்களில் சிலரே இந்த தொழில் செய்கிறார்கள். நடுநிலைமையிலிருந்து கள்ளைப்பற்றின விவகாரத்தில் நியாயம் சொல்லுவதானால் நம்முடைய வேதம் புராணம் கோவில் அவதார புருஷர்கள் ஆசாரிகள் இப்பொழுதுள்ள உயர்ந்த ஜாதிக்காரர்கள் இவ்வளவையும் நெருப்பில் போட்டு எடுத்துப் பின்னும் கோவிலைவிட்டுத் தள்ளவேண்டும்.

வேதங்களில் யாகங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. யாகமென்பது கர்மகாண்டத்தில் கூறப்பட்டுள்ள கர்மங்கள் எல்லாவற்றிலும் மிகமுக்கியமானது. இதற்கு ஆராதனை என்றும் பொருள் சொல்லப்படும். யாகங்கள் அநேக விதம். அவைகளில் த்விஜன் அவசியம் செய்யவேண்டியதாயும் பொதுவாக யாக லக்ஷணங்கள் எல்லாம் அமைந்ததாயும் உள்ளது சோம யாகம். இதை பற்றி விரிவாக யெழுத 'குடி அரசில்' எனக்கு இடமில்லை. நாயக்கரும் பத்திரிகைப் பக்கத்தை அதிகம் பண்ண இனி மேல் நினைக்காமலிருக்க காரணமுமில்லை. தன்னலம்கருதும்வைதீககோஷ்டியார்கள் பத்திரிகையின் விரோதத்தை விட்டுவிடவுமில்லை. சந்தாதார்களை சேர்த்துக்கொடுப்பதிலுள்ள நன்மைக்கு சிறிது பிரயாசை எடுத்துக் கொள்ளாதவர்கள் பிரயாசை எடுத்துக்கொள்ளுவதுமில்லை. எனக்கு கிடைத்த மூன்றும் பக்கத்திலேயே என் கையும் மனமும் நியாயமும் அடங்கவேண்டும். இமய மலையின் சாரலில் அகப்படக்கூடிய சோமக் கொடியின் சாற்றைக்குடிப்பதினால் இந்த யாகத்திற்கு சோம யாகமென்று பேர். இந்த யாகம் ஐந்து நாள் நடக்க வேண்டியது. மூன்று நாள் அநேக காரியங்கள் நடக்கும், நாலாம்நாள் பிராணிவதம். கடைசியானதாகிய ஐந்தா நாள் தான் சோமரசத்தைக் குடிப்பது. நான்காம் நாள் கொடுத்த பலி போக ஐந்தாம் நாள் காலையிலும் அக்கினிக்கென்று ஒரு ஆடு பலி கொடுப்பார்கள் (இரப்பைக்குள்ளிருக்கும் அக்கினிக்கும் ஜாடராக்கினி என்று தான் பெயர்) அன்றுதான் சமாராதனை ஆடல் பாடல்கள் தர்க்கம் நடக்கும். இமயமலைச் சாரலில் தென்னையும் பனையும் கிடையாது. அந்தந்த தேசத்திலிருந்து அகப்படும் சாதனங்களில் அந்தந்த தேசத்தார்கள் கள்ளை உற்பத்தி செய்து கொள்ளுவது போல சோமக்கொடியிலிருந்து உண்டாகும் சாறுக்கு சோமமது வென்று பெயர். இதில் ஒருவித ஆனந்த மில்லாவிட்டால் காட்டிலிருக்கும் கொடிக்கு ஆடு பலியும் பூசையும் வேண்டியதில்லை. யாகத்திற்கு கொடியின் பேரான சோம யாகமென்று பேருமிருக்காது, ஸ்ரார்த்தம் யாகம் முதலியவைகளில் மது மாம்சம் இல்லாவிட்டால் செய்தவனும் செய்து வைக்கப்பட்டவனும் நரகத்திற்குப் போகிறார்கள் என்று வேதத்தின் கர்ம

(இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க).

# திருவள்ளுவரும் மழையின் சிறப்பும்.

சிதம்பரனார் எழுதியது.

கட்டுரை 3.

இயற்கையின் பயனை எந்த நாட்டினரும் மிகவும் விரும்புவதும் இயற்கைதான். எல்லோரையும் விடப் பண்டைத் தமிழர்கள் இயற்கையின் பங்களைக் கண்டறிந்து பழகியவர்கள் ஆவார்கள். இயற்கையிலும் உலகத்திற்கு மிகவும் பயன்படக்கூடிய இயற்கைப் பொருள்களையே மிகவும் பாராட்டிக் கூறுவாராயினர். அப்பாராட்டுதல்களைப் பண்டைத் தமிழ் நூல்களில் நீர் மிகவும் சிறந்ததென்பதை யாரும் ஒத்துக்கொள்வர். நீரின்றேல்-உலகம் நடைபெறுவதெங்ஙனம்? நீரும் மழையினால்தான் உண்டாதல் கூடும். ஆகவே நீருக்குக் காரணமாகிய மழையின் பெருமையை உணர்தல் மனத்திற்கு இன்பம் அளிக்கக்கூடியதொன்றாகும். மழையினால் உண்டாகும் நன்மை தீமைகளைத் திருவள்ளுவர் கூறியவாறு அளவிட்டுக் கூறுதல் யாருக்கும் அருமையானதாகும். “மழை இடையறாது பெய்வதால்தான் உலகம நிலைபெற்று வருகின்றது. ஆகவே அம்மழைதான் உலகத்திற்கு அமிர்தமாகும் என்று உணரக்கூடிய தன்மை யுடையதாயிருக்கின்றது” என்று கூறுகின்றார். இதனால் உலகத்திற்கு உணவாக இருப்பது மழையே என்பதை உணர்த்தினர்.

உலகத்திற்கு மழை எவ்வாறு உணவாயிருக்கின்றதென்றால், மழை பெய்வதால் நிலம் வளப்பட்டு விளைவுப் பொருள்கள் மிகுதிப்படுகின்றன. அவை உலகத்திற்கு உணவாகின்றன. அன்றியும், நீரும் எல்லோராலும் உண்ணப் படுகின்றது. ஆகவே மழை உணவுப் பொருள்களை உண்டாக்கிக் கொடுப்பதோடு தானும் உணவாக உதவி செய்கின்றது. இதனால் மழை உலகிற்கு உணவாகப் பயன்படுவதை யறியலாம். (2) “உண்ணுகின்றவர்களுக்கு நல்ல உணவுகளை உண்டாக்கித்தருவதோடு, தானும் உணவாக நிற்பது மழையாகும்” என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

மழை பெய்யாமல் வறண்டுவிட்டால் வருந்துவது மிகப் பலவாகும். (3) “மழை வேண்டுங்காலத்துப் பெய்யாமல் பொய்த்து விடுமாயின், பெரிய கடலாற் சூழப்பட்ட இவ்வுலகில் பசி நிலைத்து நின்று உயிர்களைத் துன்புறுத்தும்” என்று திருவள்ளுவர் கூறுகின்றார். உலகத்தில் பசிப்பிணி மிகுமாயின் எல்லாத் துன்பங்களும் தோன்றிவிடும். மக்கள் அனைவரும் நல்லுணவின்றி வாடுங்காலத்திற் பலவித கொடிய நோய்கள் தோன்றும். உணவில்லாத காலத்தில் நாட்டிற் கொள்ளைகளும் கொலைகளும் நடைபெறுவதியற்கை. பஞ்சகாலத்திற்றான் உலகில் தீச்செயல்கள் நடைபெறும்.

மழை பெய்யாவிடில் பசிப்பிணி யுண்டாதற்குக் காரணத்தையும், (4) “மழையென்னும் வருவாய் தன் வளத்திற் குறைந்து விடுமாயின் (பெய்யாதாயின்) உழவர்கள் ஏரால் உழ மாட்டார்கள்” என்று திருவள்ளுவர் கூறுகின்றார். ஆகவே உழவுத் தொழில் குறைந்துவிட்டால் உலகம் நடைபெறாதென்பதை வலியுறுத்தி யிருப்பதை யறியலாம்.

இன்னும் மழைக்குக் கெடுக்கும் வலிமையும், காப்பாற்றும் ஆற்றலும் உண்டு. மழை பெய்யுமாயின் உலகில் விளைபொருள் சிறந்து உலகினரைக் காப்பாற்றும். பெய்யா திருக்குமாயின் உலகினர்க்குத் துன்பத்தை யுண்டாக்கும். இதனை (5) “பெய்யாமலிருந்து உலகினரைக் கெடுப்பதும், கெட்டவர்களுக்குத் துணையாக நின்று பெய்து அவர்களைக் காப்பாற்றுவதும், ஆகிய எல்லா வலிமையுமுடையதும் மழையாகும்” என்று விளக்கி யிருக்கின்றார்.

மழை பெய்யாவிடில் உலகில் ஓருயிரும் வாழவியலாது. இருக்கின்ற உயிர்களும் பசிப்பிணியாலும், மற்றுங் கொடிய நோய்களாலும் மடியும். புதிய உயிர்களும் பிறப்பதற்கு வழியில்லாதொழியும். மரஞ்செடி கொடிப் பூண்டுகளையும் காணுதற்கு முடியாதவாறு உலகம் பாழடைந்துவிடும். இதனை (6) “ஆகாயத்திலிருந்து மழை பெய்தால்தான் இவ்வுலகில் உயிர்களைக் காணமுடியும், இன்றேல் பசும்புல்லின் நுனியைக் கூட காணமுடியாததாகும்” என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

உலகில் என்றும் நீர் வற்றாமலிருப்பது கடலொன்றேயாகும், மழை பெய்வதற்குங் காரணமாயிருப்பது கடலே. அவ்வாறிருந்தும் மழை பெய்யாதிருக்குமாயின் கடலில் உண்டாக்கக்கூடிய பொருள்களும் உண்டாகாதொழியும். மழை பெய்தால் தான் நீரில் வாழ்கின்ற உயிர்கள்பெருகும். கடற் செல்வங்களாகிய முத்து, பவளம் முதலியன உண்டாகும். இன்றேல் அவைகளும் உண்டாகா. இதனை (7) “மழை கடல் நீரையே குறைத்து அக்கடலிற் பெய்யாதிருக்குமாயின், பெரிய கடலும் தனது செல்வத் தன்மையிற் குறைந்து விடும்” என்று நமது திருவள்ளுவர் விளக்கியிருக்கின்றார்.

பண்டைக்காலத்தில் நம் நாட்டினர் பற்பல சிறு தேவதைகளை வணங்கி வந்தனர். இந்நாளில் வணங்கப்படும் வீரன், கருப்பண்ணன், ஐயனார், மாரியம்மன், காளியம்மன் போன்ற தெய்வங்களுக்கு எவ்வாறு பலியிட்டு வணங்குகின்றார்களோ இவ்வாறே இத்தெய்வங்களைப் பண்டைக்காலத்தினரும் வணங்கிவந்தனர். அவர்கள் அத் தெய்வங்களிடம் வைத்த மனவுறுதியால் நினைத்தவைகளை நிறைவேற்றிக் கொண்டனர். அத் தெய்வங்களுக்குச் செய்யும் நாட் பூசைகளாலும், சிறந்த விழாக்களாலும், சுகாதாரமும், மனமகிழ்ச்சியும், நோயற்ற வாழ்க்கையும் அடைந்தனர். அவர்கள் அவ்வாறு அத்தேவர்கட்குச் சிறப்புச் செய்வதற்கும் செல்வப்பொருள்களும்இன்றியமையாது வேண்டியதாகும். மழையில்லா விட்டால் ஒன்றுங்கிடைக்காது. ஒன்றுங் கிடைக்காமற் போகவே பாமர மக்கள் சிறு தேவதைகளுக்குப் பூசை, விழா, முதலியன செய்யும் வழக்கமும் நின்றுவிடும். இவை நிற்கவே பாமர மக்கள் மகிழ்ச்சியின்றி மனத்துன்பம் அடைந்து அதனால் உடற்றுன்பமும் வரப் பெற்று வருந்துவார்கள். இதனை (8) “தேவர்களுக்கும் இவ்வுலகில் மக்களாற் செய்யப்படும் விழா பூசை முதலியன மழை பெய்யாதாயின் நடைபெறமாட்டா” என்று திருவள்ளுவர் கூறியிருக்கின்றதனால் அறியலாம்.

உலகம் செழிப்படைய வேண்டுமாயின் அறமும், தவமும் நிலைபெற்றிருக்க வேண்டும். அறமும் தவமும் நிலைபெற வேண்டுமாயின் நாடு செழித்திருக்கவேண்டும். நாடு செழிக்க மழை வேண்டுமென்பது யாவருமறிந்ததே யாகும். இதனை [9] மழை பெய்யாதாயின் இவ்வுலகில் அறம் தவம் ஆகிய இரண்டும் நடைபெறாது” என்று திருவள்ளுவர் கூறுவதனால் அறியலாம்.

உலகம் நடைபெறுவதற்குக் காரணமென்று கூறப்படுவனவற்றில் நீர் இன்றியமையாதென்பதை இது காறுங் கூறிய வாற்றால் அறியலாம். (10) எத்தகைய மேலானவர்களாயிருந்தாலும் தண்ணீரில்லாமல் உலக வாழ்க்கையை நடத்த முடியாதவராவர். அந்த நீரும் மழையில்லாவிட்டால் உண்டாகாது” என்று திருவள்ளுவர் கூறி மழையின் பெருமையைப் பற்றித் திருவள்ளுவர் கூறியன முழுவதையும் ஆராயும்போது மக்க

# கோஷா முறை.

30—10—1927 ‘குடி அரசு’ பத்திரிகையில் “கோஷா முறை அகன் கொடுமைகள்” என்ற தலையங்கத்தின் கீழ் 13-வது பக்கம் 1-வது காலம் கடைசியில் “ஸ்திரீகள் கோஷாக்களா யிருக்கவேண்டுமென்று குரானில் ஓரிடத்திலும் காணவில்லை” என்று காலஞ்சென்ற பாபு கோவிந்த தாஸ் இந்தியன் ரிவ்யூவில் எழுதியதை தமிழ்நாடு மொழி பெயர்த்ததாய் வியாசம் எழுதப்பட்டிருக்கிறது அதை வாசித்த எந்த முஹம்மதியரும் ஆச்சரியமும் ஆத்திரப்படாமலும் இருக்க மாட்டார்கள்.

இஸ்லாம் மத சட்டதிட்டங்கள் அன்னிய பாஷையில் விவரிக்கப் பட்டிருப்பதை செவ்வனே தெரிந்து கொள்ளாமல் ஷெ. காலஞ்சென்ற பாபு கோவிந்த தாஸ் பிசகாய் எழுதியதற்கு நாம் வருந்துகிறோம். இனி இம்மாதிரி தவறான விஷயங்களை அறியாமையால் எந்த வகுப்பினரும் செய்யாமலிருக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறது.

ஸ்திரீகள் கோஷா முறையில் இருக்குமாறு குரானில் எனக்குத் தெரிந்தமட்டில் மூன்று இடங்களில் குறிக்கப் பட்டிருக்கிறது.

1. வீட்டை விட்டு புறப்படுவார்களாகில் தொந்திரவுக்காளாகாமல் தங்கள் பேரில் போர்வையைத் தொங்கவிட்டுக் கொள்ளும்படி உம்முடைய சம்சாரங்கள், குமாரத்திகள், மற்றும் முஸ்லீம் பெண்களுக்கு சொல்லுங்கள் ஓ நபியே. (பாகம் 22 வாக்கியம் 24).

2. தகப்பன், குமாரர்கள், சகோதரர், சகோதரர் குமாரர்கள், சகோதரி குமாரர்கள் இவர்களுக்குப் பெண்கள் முகத்தைக் காட்டுவதில் குற்றமில்லை. மேற் சொல்லியவர்கள் நீங்க மற்ற எல்லாருக்கும் தங்கள் முகத்தை மறைத்துக்கொள்ள வேண்டும். ஓ முஸ்லீம் பெண்களே! அல்லாவுக்கு பயந்து கொள்ளுங்கள் சந்தேகமில்லாமல் ஆண்டவன் எதையும் அறிகிறான். (பாகம் 22 வாக்கியம் 20).

3. அன்னிய புருஷர்களை பார்க்காமல் தம் கண்களை மூடிக்கொள்ளும்படி முஸ்லீம் ஸ்திரீகளுக்கு சொல்லும் ஓ நபியே, (பாகம் 18 வாக்கியம் 127)

— சோ. உ. அப்துல் கபூர் சாயபு.

# ஈரோடு சர்க்கிள் தேவஸ்தான கமிட்டி

நவம்பர்-மீ 25-உ ஈரோடு தாலூகா போர்டு ஆபீஸில், பழயகோட்டை பட்டக்காரர் மகா-ள-ள-ஸ்ரீ ராவ்பகதூர் நல்லதம்பிச் சக்கரை மன்றாடியார் அவர்கள் அக்கிராசனத்தில் தேவஸ்தான கமிட்டி மீட்டிங் ஒன்று கூட்டப் பட்டது. அதில் சென்னை இந்துமத தேவஸ்தான போர்டு தலைவர் சர். சதாசிவய்யர் காலமானதற்காக ஒரு அநுதாபத் தீர்மானம் வைஸ் பிரசிடெண்ட் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கரால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

ளாய்ப்பிறந்தவர்கள் அடைய வேண்டிய அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் அடைவதற்குக் காரணமாயிருப்பது செல்வம் ஒன்றேயென்றும், செல்வம் பெருகவேண்டுமாயின் நாடு வளம்பெறவேண்டுமென்றும், நாடு வளம்பெற வேண்டுமாயின் மழை பெய்யவேண்டுமென்றும். மழை பெய்யாதொழியுமாயின் உலகம் அழிந்து விடுமென்றும் அறிந்து கொண்டோம். அம் மழைக்குக் காரணமாகிய இறைவனை யாவரும் வணங்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

## நகரசபைத் தலைவர்.

சென்னை நகரபரிபாலன சபையின் தலைவர் தேர்தல் சென்ற புதன்கிழமை மாலை நடைபெற்றது. திவான் பகதூர் கோபதி நாராயணசாமி செட்டியார் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

ஸ்ரீமான் செட்டியார் சென்றவாண்டுந் தலைமைப்பதவி வகித்திருந்தவர். அப்பதவியேற்றுத் தமது திறமை பொறுமை முதலியவற்றை அவர் வெளிப்படுத்தினார். இம்முறை அவர் அப்பதவியைச் சிறிதும் விழைந்தாரில்லை. ஆயினும் அவர் சென்றவாண்டு கட்சிப்பிணக்குகளில் சிக்குறாது நடாத்திய நேர்மை அவரை இம்முறையும் தலைவராக்கியது. இரண்டாமுறையும் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்ட ஸ்ரீமான் செட்டியாருக்கு நமது வாழ்த்து உரியதாக.

சென்ற புதன்கிழமை நடைபெற்ற நகரசபைத் தேர்தல் சிறப்பாக நகரத்தின் உள்ளத்தையும், பொதுவாக நாட்டின் அகத்தையும் ஈர்த்தது கருதற்பாலது. இத்தேர்தலில் சுயராஜ்யக்கட்சியின் திருவிளையாடல்களும், ஸ்ரீமான் சத்தியமூர்த்தியின் வகுப்பு வாதமும் வெள்ளிடை மலைபோல் விளங்கி விட்டன.

முனிசிபல் சுயராஜ்யக்கட்சித் தலைவராகிய ஸ்ரீமான் சாமி வெங்கடாசலஞ் செட்டியார் நகரசபைத் தலைவர் பதவியை வேட்டு நின்றார். சுயராஜ்யக்கட்சிக் கொள்கைக்கு முற்றும் மாறுபட்ட அரசியல் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீ ஜி. ஏ. நடேசய்யரும் அப்பதவிவேட்டு நின்றார். சுயராஜ்யக்கட்சி எவரை ஆதரிக்க முன்வருதல் வேண்டும்? நியாயப்படி ஸ்ரீமான் செட்டியாரை ஆதரிக்கவேண்டுவது அக்கட்சியின் கடமை. ஆனால் சுயராஜ்யக்கட்சித் தலைவருள் ஒருவராக ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஐயர் ஸ்ரீமான் ஜி. ஏ. நடேசய்யரை ஆதரிகக விண்ணும் மண்ணுஞ் சுழல முயன்றார். இம்முயற்சியால் சுயராஜ்யக்கட்சி பிராமணரல்லாதார்க்குள், அக்கட்சி பிராமணர்க்கும் பிணக்கு நேர்ந்துவிட்டது. சுயராஜ்யக்கட்சி பிராமணரல்லாதார் "எமக்குப் பிராமணர் பிராமணரல்லாதார் வேற்றுமையில்லை நமது கட்சியில் சேர்ந்த ஒருவரையே ஆதரிப்பேம்" என்று உறுதியாக நின்றனர். ஸ்ரீமான் சத்தியமூர்த்தி கட்சியைக் கவனியாது ஸ்ரீமன் ஜி. ஏ. நடேசய்யரையே ஆதரிக்குமாறு மற்றவரை வலியுறுத்தினார். முடிவில் ஸ்ரீமான் சாமி வெங்கடாசலஞ் செட்டியார் தலைவர் பதவி வேட்கையை விடுத்தார். ஸ்ரீமான் கோபதி நாராயணசாமி செட்டியார் நிறுத்தப்பட்டார். ஸ்ரீமான் ஜி. ஏ. நடேசய்யரும் எதிர்த்து நின்றார். சுயராஜ்யக்கட்சி ஜஸ்டிஸ்கட்சி என்பது செத்து அது பிராமணர் பிராமணரல்லாதார் பிணக்காக முடிந்தது. சுயராஜ்யக்கட்சிப் பிராமணர் பிராமணர் பக்கம் நின்றனர்; பிராமணரல்லாதார் பிராமணரல்லாதார் பக்கம் நின்றனர். சென்னையின் அரசியல் வாழ்வு இவ்வாறாக முடிந்தது! இப்பிரிவிற்குக் காரணர் யாவர்?

சில பிராமணத் தலைவர்கள் ஸ்ரீமான் சத்தியமூர்த்தியின் செயலை மறுக்க முன்வந்தார்கள். ஹிந்து முதலிய பத்திரிகைகளும் ஸ்ரீமான் சத்தியமூர்த்தியின் வகுப்பு மாயையைக் கண்டித்தன. தொடக்கத்திலிருந்தே நேர்மை கடைப்பிடித்து ஸ்ரீமான் சத்தியமூர்த்தியின் வகுப்புப்பித்தை அன்பர்கள் கண்டித்து வந்திருப்பின் சென்னை அரசியல் நிலை இத்துணை கேடுற்றிராது என்பது திண்ணம்.

ஸ்ரீமான் சத்தியமூர்த்தி பெரும் பிழை நிகழ்த்தி விட்டார். இப்பிழை மற்றவர் நிகழ்த்தியிருப்பின் அவர்கள்மீது கண்டனத்தீர்மானங்கள் பொழியும்.

இப்பிழைபாட்டில் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரும் பங்காளி என்று ஸ்ரீ சாமி வெங்கடாசலஞ் செட்டியார் கூறுவதுங் கவனிக்கத்தக்கது.

வகுப்பு வாதத்தை வளர்க்கும் பிராமணர்கள் வழிக் காங்கிரஸ் உழன்று கொண்டிருக்குமட்டும் நாட்டில் வகுப்பு வாதம் வளருமா? தேயுமா?

"நவசக்தி"

---

## சுற்று அறிக்கை.

தஞ்சாவூர் ஜில்லா, திருச்சி ஜில்லா, திருநெல்வேலி ஜில்லா, கோயமுத்தூர் ஜில்லா முதலிய ஜில்லாக்களிலும், தாலூகாகளிலும், கிராமங்களிலும் உள்ள சுயமரியாதைச் சங்கங்களின் இருப்பிடமும், காப்பாளர், துணைத்தலைவர், அமைச்சர் துணையமைச்சர், பொருளாளர் ஆகியவர்களின் பெயரும் உடனே கீழ்க்கண்ட விலாசத்திற்கு தெரிவிக்க வேண்டுகிறோம். சங்கங்கள் நிறுவப் பெற்று மற்ற ஜில்லாக்களிலும் சுயமரியாதை பெறவிரும்புகின்ற அன்பர்கள் உடனே ஏற்படுத்தி 31—12—27 தேதிக்குள் தெரிவித்து விட்டால் நன்மையாகும்.

இதற்குக் காரணம் சென்னை மாகாண சுயமரியாதை மகாநாடு ஒன்றை திருச்சினாப்பள்ளி ஜில்லாவிற் சமீபத்தில் நடத்த எண்ணுவதாலும், இச்சுயமரியாதைமலர்களை 'ஒழுங்கு' என்ற ஓர் கயிற்றில் கோர்க்க வேண்டியிருத்தலினாலும், அண்மையில் அச்சியற்றுகின்ற சுயமரியாதைப் பஞ்சாங்கத்தில் இப்பெயர்களை வெளியிட எண்ணுவதாலும் இன்னும் இப்போது கூறமுடியாத சில அவசரமான காரியங்களை முன்னிட்டுமேயாகும்.

"கவரிமான் தன்னுடைய மயிர்த்திரளில் ஒன்று உதிர்ந்தாலும் வாழாமை போல, மக்கள் தங்களின் உரிமைகளை இழந்துவாழ விரும்பார்கள்" என்பது தெய்வப்புலமை திருவள்ளுவர் வாக்கு.

கி. அ. பெ. விசுவநாதபிள்ளை,
மணிவாசகத் தமிழகம், திருச்சினாப்பள்ளி.

---


## மதுரை எலெக்ட்ரிக் கம்பெனி Ltd.

### ஷேர் 1-க்கு ரூ. 10.

தயவு செய்து டி கம்பெனியில் பங்குகள் எடுத்துக்கொள்ளுங்கள். மிகவும் லாபகாமானது. பிராஸ்பக்டஸ்களுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் எழுதுங்கள்


---

## காரைக்குடி
## நல உரிமைத் தொண்டர் சங்கம்.

நவம்பர் 21உ மாலை 5 மணிக்கு டி சங்க ஹாலில் பெரிய உபந்யாசக் கூட்டமொன்று நடைபெற்றது. அங்கத்தினர்களும், அபிமானிகளும், 'குமரன்' பத்திராதிபர் ஸ்ரீ. சொ. முருகப்ப செட்டியார். 'அருணகிரி' கார்யாலம் ஸ்ரீ. தா. பாலய்யா பிள்ளை ஸ்ரீமான்கள் அரு. சோமசுந்தரஞ் செட்டியார் முதலியவர்கள் உள்பட சுமார் 300 பேர் விஜயம் செய்திருந்தனர். ஸ்ரீமான் முருக்கப்ப செட்டியார் தலைமை வகித்தார். ஸ்ரீமான் பாலய்யா பிள்ளை நிர்மாண திட்டத்தைப் பற்றியும் ஸ்ரீமான் சோமசுந்தரம் செட்டியார் நமது முன்னேற்றத்தைப் பற்றியும் அழகாகப் பேசினார்கள் பின்னர் ஸ்ரீ பாலய்யா பிள்ளையவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு தலைவர்களுக்கும் உபந்யாசகர்களுக்கும் பூச்செண்டுகள் வழங்கப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது என்று சங்க காரிய தரிசி பெரி. சி. மெய்யப்பர் எழுதுகிறார்.

# திருநெல்வேலி ஜில்லா

## சுயமரியாதை சங்க மகாநாடு வைபவம்

## ஊர்வலமும் கூட்டத்தில் குதூகலமும்

நவம்பர் 28உ காலை 8-30 மணிக்கு புகை வண்டி நிலையத்திலிருந்து வைக்கம் வீரர் உயர்திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களும் திருச்சி விஸ்வநாத பிள்ளை அவர்களும் பட்டுக்கோட்டை அழகிரிசாமி நாயுடு அவர்களும் மாயவரம், எஸ். வி. லிங்கம் முதலியவர்களும் நகர முக்கிய பிரமுகர்களால் நல்வர வேற்கப்பட்டு சங்க கட்டிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். 9-30 மணிக்கு தலைவர்களுக்கு புஷ்ப ஹாரங்களிட்டு பிரமுகர்களுக்கு அறிமுகம்செய்விக்கப்பட்டபின் தலைவர்கள் மோட்டார் மூலியமாய் ஆண்டுவிழா பந்தலுக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். முன்னே யானையுடனும் நாகசுரமேள வாத்தியத்துடனும் திரளான ஜனக்கூட்ட நெருக்கத்துடன் முக்கிய வீதிகளின் வழியே சென்று 10-30-க்கு மகாநாட்டுப் பந்தலை அடைந்தார்கள். கொட்டகை நிறைய ஜனங்கள் குழுமி இருந்தார்கள். பிரபலஸ்தர்களுள் ஸ்ரீமான்கள் சிதம்பரநாதமுதலியார் எம. எல்.ஸி. சேதுபிள்ளை,பி.ஏ.பி.எல். எஸ். டி. பொன்னம்பலநாத முதலியார், ஆர். சுப்பையா முதலியார், ஷண்முகசுந்தரம் பிள்ளை, புருஷோத்தம முதலியார், ஆவுடையப்ப பிள்ளை, தூத்துக்குடி குமாரசாமி பிள்ளை, ஆர். வி கணபதி பிள்ளை, கோட்டாரம் கே. இ. பொன்னையா பணிகர் நகரின் மிட்டாதார் வி. பி. நல்லை நாயகம் பிள்ளை அவர்கள், டாக்டர் கண்ணப்ப பிள்ளை, வைகுண்டராம பிள்ளை, முத்தையா பிள்ளை, மணம் பூண்டி ம. ரா, குமாரசாமி பிள்ளை, என். தெண்டபாணி பிள்ளை, சென்னை ச. பழனிசாமி பிள்ளை, கோயில்பட்டி கி. ஆ. பெ. விஸ்வநாதன் பிள்ளை, திருச்சி அழகிரிசாமி நாயுடு அவர்கள் பட்டுக்கோட்டை, எஸ் வி. லிங்கம் மாயவரம், ஏ. ராமனுஜ தேசிகர், காரியதரிசி டி. எஸ். வைகுண்டராம பிள்ளை, நெல்லையப்ப பிள்ளை மற்றும் நகரின் முக்கிய பிரமுகர்களும் மேடைமீது வீற்றிருந்தார்கள்.

### தெய்வ வணக்கம்.

எஸ். எம். சங்கம்மாள், பி. லெக்ஷ்மி, ஆர். அம்மணி, பி. சொர்ணம், ஏ. சேது, என். தாயம்மாள், எ. கனகாம்பாள், ஆர். பார்வதி முதலிய 6, 7 வயதுடைய சிறுமிகள் தெய்வ வணக்க கீதங்களுக்கு பின் புரோகிதக் கொடுமை, பார்ப்பனீய மாயம், சுயமரியாதையின் அவசியம் இவைகளை விளக்கக்கூடியதும் கேட்போர் மனத்தைக் கரைத்து ன்த வசப்படுத்தக் கூடியதுமான கீதங்களை பாடினார்கள். இதில் சௌ. சொர்ணம் என்ற சிறுமி பாட்டின் முழு சுவையுடன் பாடியதும், திரு. நடராஜ பிள்ளை அவர்களின் குமாரத்தி 5 வயது சிறுமியான சௌ என் தாயம்மை மிக இனிய இன்னிசையுடன் பாடியதும் குறிப்பிடக் கூடியதாகும்.

மகாநாட்டை ஆரம்பிக்கும் முன் காரியதரிசி அவர்களால் சிதம்பரநாத முதலியார் எம் எல் ஸி அவர்கள் மகாநாட்டைத் திறந்துவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார்.

### திரு. டி. கே. சிதம்பரநாத முதலியாரின் அரிய உரை.

சகோதர சகோதரிகளே! சுயமரியாதைச்சங்க ஆண்டு நிறைவு விழாவைத் திறந்து வைக்குமாறு எனக்கு கட்டளையிடுவது பொருத்தமற்றது. இதை இந்த உணர்ச்சியை தமிழ் நாட்டில் ஆரம்பித்தவர் திரு நாயக்கர் ஆவர். (கரகோஷம்) அன்றியும் பார்ப்பனரல்லாதார் இயக்கத்துக்கு புத்துயிர் அளித்த பெருமை அவருக்கே உரித்தானதாகும். இன்று மாகாணம் முழுதும் மட்டும் அல்ல இந்தியா முழுதும் நமது இயக்கம் கொண்டாடப் படுகிறது. அது மட்டுமல்ல இம்மாகாணத்தில் கூட திரு ஐயங்காரே உணர்ந்து சமாதானம் விரும்புவதே போதிய சான்றாகும். அம்மகத்தான பெருமைக்கு அருகர் நாயக்கரேயாவர் (கரகோஷம்) இதைப்பற்றி கூறுவது மிகை ஆகும். காங்கிரசின் பெயரால் திரு நாயக்கர் ஆற்றிய ஊழியமும் தியாகமும் மகத்தானதாகும், முதன் முறை நாயக்கர் நமது இயக்கத்துக்கு ஆதரவு அளித்த காலத்தில் முதல் முறையில் அவர் பிரசங்கத்தைக் கேட்டபோது நான் பிரமித்துப் போனேன். 'குடி அரசின்' பெருமை மிக ஆகும். ஆடாததை எல்லாம் ஆட்டிவைத்த பெருமை 'குடி அரசு'க்கே உரித்தானதாகும், இதற்குகாரணம் அப்பெரியாரின் செயலும் எழுத்தும் வன்மை கொண்டதாகவே இருந்தது. 'குடி அரசு'க்கு இன்றிருக்கும் யோக்கியதை உங்கட்குத் தெரியும். அதில் மக்கள் மனதை கவர்த்தக்க அளவுகடந்த சக்தி இருப்பதற்குக்காரணம் அழகான ஆராய்ச்சியா தமிழா? இல்லை. பின் அவர் உள்ளக்கிடக்கிலுள்ளதை அப்படியே எடுத்துச் சொல்லுவது. அதுவும் மிக சாதாரண தமிழிலேயேதான் இருக்கிறது. நாயக்கர் படிப்பில் பட்டதாரியல்ல. எத்தகைய கல்வியாளரும் கோடிக்கணக்கான ஜன சமூகமும் திகைக்கத்தக்க வன்மையுடைய பத்திரிகையை இவர் கொடுத்தது நமது பூர்வ புண்ணியமே யாகும். ஒரு வருடத்திற்கு முன் இச்சங்கத்தை ஏற்படுத்திய அப்பெரியாரே இதற்குத் தலைமை வகிக்கவும் வேண்டியதற்கு இணங்கினர். மாகாணத்தின் மகத்தான பொறுப்பையேற்ற பெரியார் தமக்குள்ள பெரும் வேலைகளுக்கிடையில் இங்கு விஜயம் செய்திருக்கிறார். எனவே இவ்வுரைகளோடு இவ்வருட விழா மகாநாட்டைத் திறக்கிறேன். இவ்விழாவுக்கு தலைமை வகிக்குமாறு 'நாயக்கரை' கேட்டுக் கொள்ளுகிறேன் என்று கூறி ஆசனத்தமர்ந்தார்.

ஆர் சுப்பிரமணிய முதலியார் பி.ஏ,பி.எல். அவர்களும் வைகுண்டம் எஸ் டி. பொன்னம்பலம் முதலியார் அவர்களும் நாயக்கரின் பெருமையையும் புகழையும் சபையோர் பரவசப்படும்படி பேச பிரேரணை செய்யப்பட்டு ஆமோதிக்கப்பட்டு திரு நாயக்கர் அவர்கள் நீண்ட கரகோஷத்துடன் ஆசனத்தில் அமர்ந்தார்.

### ஸ்ரீமான் நாயக்கரின் சொற்பொழிவு.

இவ்வாண்டு விழாவுக்கு நான் தலைமை வகிக்க வேண்டுமென்று கட்டளை இட்ட கனவான்கள் எல்லாம் என்னைப்பற்றி அதிகம் கூறினார்கள். அது என்னை மிகுதியும் வெட்கப்படும்படி செய்துவிட்டது. அதனால் நான் என்ன பேசவேண்டுமென்று எண்ணினேனோ அதை மறக்கச் செய்தது அவர்களுக்கு என்னிடமும் எனது இயக்கத்திடமும் உள்ள பற்றும், அவர்களின் இயற்கையான பெருந்தன்மையும், அளவுக்கு மீறி என்னைப் புகழச்செய்தது அப்புகழுரைகளுக்கு நான் சிறிதும் அருகனல்ல ஆனாலும் (இல்லை இல்லை முழுதும்பொருந்தும் இன்னமும் அதிகமாயும் பொருந்தும் என்கின்ற கூச்சல்) அதற்கு வந்தனம் செலுத்துகின்றேன்.

இயக்கம் ஆரம்பித்த காலத்தில் எதிர்ப்புகள் பலமாய் இருந்தது இன்னும் யாவரும் ஏகமனதாய் ஆதரிப்பதாகவும் எண்ண இடமில்லை இன்னும் அதிக எதிர்ப்பு இருக்கிறது ஆயினும் இத்தகைய மகான்கள் எல்லாம் ஆதரவு அளித்துவருவதை கண்டு மிக தைரியங்கொண்டு அந்த ஆசையின்மீது அவர்கள் உரையை நான் சகித்துக்கொண்டிருக்கிறேன். 'குடி அரசை'ப்பற்றி மிக அதிகமாகக் கூறினார்கள். அதில் உள்ள குற்றமெல்லாம் எனக்குத் தெரியும். அதில் உள்ள மெல்லின வல்லினம் போன்ற பல இலக்கணப் பிழைகளும் மற்றும் பல பிழைகளும் எனக்குத் தெரியும். இதற்காக நான் இலக்கணம் கற்கப்போவதில்லை. இவ்வாண்டு விழாவுக்கு எனக்கு கடிதம் அனுப்பாவிட்டாலும்எங்கிருந்தாலும் ஓடி வந்துவிடுவேன். இந்த நிலையில் உள்ள என்னையே தலைமை வகிக்கவேண்டுமென்று கூறியது எனது பாக்கியமேயாகும். சிறந்த கல்வியாளர்களும் பெரியார்களும் நிறைந்த இந்த ஜில்லா வாசிகளான நீங்கள் இவ்வியக்கத்துக்கு இவ்வளவு ஆதரவு காட்டி வருவதைக்கண்டு நான் பெருமை அடைவது மட்டுமல்ல, மற்ற ஜில்லா வாசிகளும் உங்களுடன் போட்டியிட்டு தங்கள் சுயமரியாதையை நிலைநிறுத்துவதில் கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டுமென்று மீண்டும் அறிவித்துக் கொள்ளுகிறேன்.

இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க.

## மாயவரத்தில் சென்ற நவம்பர் மீ 21ந் தேதியில் கூடிய கூட்டத்தில் ஸ்ரீமான் திருச்சி கி. ஆ. பெ. விஸ்வநாதம் பிள்ளை அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு

நான் இன்று பேசப்போகும் விஷயத்துக்கு ஏமாறுகிறவர்கள் இல்லையானால் ஏமாற்றுகிறவர்கள் இல்லையென்று மட்டும் கூட்டிக்கொள்ளுகிறேன். நம்முடைய மதவிஷயத்திலும், சமுதாய விஷயத்திலும் எவ்வளவு தூரம் நாம் அன்னியரால் ஏமாற்றப்படுகிறோமென்பதை எடுத்துக்கூறப்போகிறேன்.

முதலாவதாக சாமி என்று அழைக்க உபயோகப்படும் சொல்லால் எவ்வளவு ஏமாற்றப்பட்டிருக்கிறோம். அன்பையும் ஜீவகாருண்யத்தையும், நல்லொழுக்கத்தையும் கொண்ட பெரியோர்களையும், சந்நியாசிகளையும், துறவிகளையும் அழைக்க ஏற்பட்டவார்த்தைதான் 'சாமி' என்பது இப்போது அது யோக்கியப்பொறுப்பற்ற தன்மையில் உபயோகப்படுகிறது.

பிறவியின் காரணமாய் ஓட்டலில் எச்சில் தட்டு அலம்புபவனையும், காவல் வேலை பார்ப்பவனையும், வக்கீல் வேலை செய்பவனையும், பலகாரம் விற்பவனையும், தாசிகளை அறிமுகப்படுத்திவைப்பவனையும் சாமி என்று கூப்பிடுகிறோம். நம்மில் எவ்வளவு பெரியமனிதராயிருந்தாலும், எவ்வளவு ஒழுக்கமுள்ளவராயிருந்தாலும், ஒருசிறு பையனையும் பரசுத்தமான அயோக்கியனாயினும் பார்ப்பன என்கிற காரணத்துக்காக சாமி என்று கூப்பிடுகிறோம். அதுபோலவே பார்ப்பனன் எவ்வளவு இழிகுணம் படைத்தவனாயிருந்தாலும் நம்மை "சூத்திரன்' என்று அழைக்கிறான். சாமி என்பதற்குக் கடவுள் என்ற அர்த்தம். சூத்திரன் என்பதற்கு பார்ப்பனனின் வைப்பாட்டி மகன், பார்ப்பனனுக்கு அடிமை வேலை செய்யக் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவன். நிரந்தரமாய் சுதந்தரமற்றவன், மண், பெண், பொன் முதலிய சொத்துக்கள் வைத்திருக்க உரிமையற்றவன். மீறி வைத்திருந்தால் உதைத்துப் பிடுங்கிக்கொள்ளப்பட வேண்டிய நிலைமையுள்ளவன் என்று பொருள். ஆகவே, பார்ப்பனர்களை நாம் சாமி என்று அழைப்பதாலும் அவர்களைக்கண்டால் 'அடியேன் தாசன் நமஸ்காரம்' என்று சொல்வதாலும், பார்ப்பனர்களைக் கடவுளுக்குச் சமானமென்றும் நாம் அவர்களுக்குக் கீழ்ப்பட்ட அடிமைத் தாசர்களென்றும் நாமே ஒப்புக்கொண்டவர்களாகிறோம்.

நாம் சாமி என்று கூப்பிடுவதையும், அவர்களைக்கண்டால் கும்பிடுவதையும் நிறுத்திவிட்டால் அவர்கள் நம்மை சூத்திரர்கள் என்றழைப்பதும்தானாக நின்று விடும்.

குருக்கள் என்கிற முறையிலும் நாமாக வலிய ஏமாறுகிறோம். குருக்கள் என்பவர்கள் மூன்று வகையானவர்கள். அவர்கள் லோக குரு, குல குரு, புரோகித குரு, எனப்படுவர். லோக குரு என்பது ஒரு அர்த்தமற்றதும் ஏமாற்றக் கூடியதுமான வார்த்தை. லோகசூரு என்பவன் லோகத்திலுள்ள ஐந்து கண்டங்களுக்கும் குருவல்ல. ஆசியாக்கண்டத்திலுள்ள இந்தியா தேசம் முழுதுக்கும் குரு வல்ல. இந்தியாவில் ஒருபாகமாகிய தென்னிந்தியாவிலுள்ள இந்துக்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்களெல்லாருக்குங் கூட குருவல்ல. இந்துக்களில் பார்ப்பனர் என்கிறவர் எல்லோருக்குங் கூட குருவல்ல. பார்ப்பனர்களில் உள்ள பல உள் வகுப்புகளில் ஸ்மார்த்தர்கள் என்று சொல்லப்படுகிற ஒரு சிறு கூட்டத்திற்கு மாத்திரந்தான் குருவாயிருப்பவர் இந்த விஷயம் நமது ஜனங்கள் அறியாமல் பார்ப்பனர்கள் வார்த்தையைக்கேட்டுக்கொண்டு ஏமாந்து விடுகிறார்கள். இதையறிந்த பார்ப்பனர்கள் லோக குரு லோக குரு என்று சொல்லிக்கொண்டு கொள்ளைக்காரர்களைப்போல் ஒருவனைப் பல்லக்கில் வைத்து தூக்கிக்கொண்டு வந்து நம்மிடையில் விட்டு லோக குரு என்று சொல்லி நம்மையெல்லாம் அவன் காலில் விழச்செய்து நம்மிடமிருந்து ஆயிரம், பதினாயிரமாகப் பணத்தைப் பிடுங்கிக்கொடுத்து, அவன் காலைக் கழுவின தண்ணீரில் ஒரு கரண்டித் தண்ணீர் கொடுத்துக் குடிக்கச் செய்துவிட்டு ஓடிப்போகிறார்கள். ஒரு கரண்டி தண்ணீருக்கு ஆயிர ரூபாய் வீதம் வசூலானால் ஒரு செம்புத்தண்ணீருக்கெவ்வளவு ரூபாய் சம்பாதிக்கிறார்கள். ஒரு பீப்பா தண்ணீருக்கு எவ்வளவு சம்பாதிக்கிறார்கள் என்று கணக்குப்பாருங்கள். இப்படி ஆயிரக்கணக்காக நாம் கொட்டுகிற ரூபாய் எதற்கு உபயோகப்படுகிறது? அதை யார் அனுபவிக்கிறார்கள்? கொடுத்தவர்களுக்கு என்ன பலன் ஏற்படுகிறது? இந்த லோக குரு என்ன உபதேசம் செய்து மதத்துக்கோ, தேசத்துக்கோ என்ன நன்மை செய்கிறார் என்று யாராவது யோசித்துப் பார்த்துப் பணம் கொடுக்கிறீர்களா? லோக குரு வந்துவிட்டார் என்றால் திடீரென்று கீழே விழுந்து கும்பிடுவதுதான் மனிதனுடைய கடமையென்று நம்மில் அநேகர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரி மூடத்தனம் நம்மிடத்திலிருக்கிறபோது பார்ப்பனர்களைக் குற்றம் சொல்வதில் என்னபலன்?


இதுபோலவே குல குரு என்கிற கூட்டத்தார் வீடு தேடி வந்து வசூல் பண்ணிக் கொண்டுபோய் விடுகிறார்கள். அவர்களுடைய ஒழுக்கம் நாணயம் யோக்கியதை ஒன்றும் கவனிக்காமல் வந்தவுடன் காலில் விழுந்து பணத்தைக்கொடுத்துவிடுகிறோம். அந்தப்பணம் எதற்கு உபயோகப்படுகிறதென்றும் அதனால் நமக்கு என்ன பலன் என்றும் கவனிப்பவர்களே கிடையாது.

புரோகித குரு என்பவரும் இதுபோலவே வீடு வீடாய் நுழைந்து சடங்கு செய்யவேண்டுமென்றும், தாய் தகப்பன்மாரை மோட்சத்திற்கு அனுப்புகிறேன் என்றும், புண்ணியமென்றும் தர்மமென்றும் சொல்லியேமாற்றிக் கொள்ளையடிக்கிறார்கள். அவைகளிலும், தெருவில்போகிற பார்ப்பானுக்குப் பணம் கொடுப்பதால் எப்படி பாவம் தொலையும், எப்படி புண்ணியம் உண்டாகும், எப்படி மோக்ஷம் வரும் என்கிற கவலையே இல்லாமல், பணத்தையும் அரிசி பருப்பு காய்கறி சாமானத்தையும் அள்ளிக் கொடுத்துக் காலில் விழுகிறோம்.

பத்திரிக்கை விஷயங்களிலும், நாட்டுக்கும், நமது சமூகத்திற்கும் அநுகூலமான பத்திரிகை எது, விரோதமான பத்திரிகை எது என்கிற பகுத்தறிவில்லாமல் நமது சமூகத்தின் சுயமரியாதையையே அழிப்பதென்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிற இந்து, சுதேசமித்திரன் முதலிய பார்ப்பன பத்திரிக்கைகளையே ஜனங்கள் வாங்கிப் படித்து அவர்களை மாத்திரம் 1000, 10000 லாபம் அடையச் செய்கிறார்களே யல்லாமல் நமது சமூகத்திற்கென்றே உழைப்பதும் மக்களுக்கு சுயமரியாதைக்குக் கஷ்டப் படுவதுமான 'ஜஸ்டிஸ்.' 'திராவிடன்' 'குடிஅரசு' முதலிய பத்திரிக்கைகளை போதுமான அளவு ஆதரிக்க முன் வருவதில்லை.

மற்றும் அரசியலிலும் பார்ப்பனர்களைப் பின் பற்றுகிறோமே யொழிய பார்ப்பனரல்லாத தலைவர்களை பின் பற்றுவதே இல்லை. பார்ப்பனர்களை விட பார்ப்பனரல்லாத தலைவர்கள் எவ்விதத்தில் தாழ்ந்திருக்கிறார். டாக்டர் நாயர், சர். தியாகராய செட்டியார் போன்ற சுயநல மற்ற உழைப்பாளிகளும் சுயமரியாதைக்கு உழைத்தவர்களும் பார்ப்பனரில் யாராவது இருக்கிறார்களா? உள்ளது உள்ளபடி எடுத்துச்சொல்லி மக்களுக்கு உண்மையான சுயமரியாதையை ஊட்டி வருகின்ற ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் போன்று யாராவது பார்ப்பனர்களில் இருக்கிறார்களா?

அழகான தமிழில் எழுத பேசகூடியவரும் மத சமய ஆராய்ச்சியிலும் வல்லவருமான ஸ்ரீமான் கல்யாணசுந்தர முதலியாரைப் போன்றவர்கள் பார்ப்பனரில் யாராவது இருக்கின்றார்களா? ஸ்ரீமான்கள் A. ராமசாமி முதலியாரைப்போலும் R K ஷண்முகம் செட்டியாரைப் போலும் ஆங்கிலத்தில் பேசக்கூடிய பேச்சு வல்லபர்கள் யாராவது பார்ப்பனர்களில் இருக்கிறார்களா? தந்திரத்திலும் சமயத்திற்குத் தகுந்தபடி நடத்துகொள்வதிலும் டாக்டர் வரதராஜுலு நாயுடுவைபோல்பார்ப்பனர்களில் யாராவது இருக்கிறார்களா? ஆகவே ஸ்ரீமான்கள் ஸ்ரீனிவாசயயங்கார், சத்திய மூர்த்தி, எ. ரங்கசாமி அய்யங்கார் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார், சி. பி. ராமசாமி அய்யர் ஆகியவர்களை விட முன் சொன்ன பார்ப்பனரல்லாத தலைவர்கள் எவ்வளவு உயர்ந்தவர்கள் என்பதை உணர நமது மக்களுக்குப் போதிய கருத்தில்லையென்றுதான் சொல்ல வேண்டும். எனவே, பார்ப்பனரல்லாதார் ஏமாறுந் தன்மையை விட்டு உணர்ச்சி பெற்று விழிப்படைவார்களானால் ஏமாற்றும் பார்ப்பானர்கள் தானாகவே மறைந்து போவார்கள். இதற்கு சுயமரியாதை இயக்கத்தைத் தவிர வேறு எவ்வித ஆதாரவும் இது சமயம் நமக்கு கிடையாது. ஆகவே நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து இவ்வியக்கத்தைப் பரப்பி ஏமாற்றத்திலிருந்து விடுபட்டு சுயமரியாதை யடைந்து விடுதலை பெறுவோமாக.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு.

ஈரோடு, பிரபவ-௵ கார்த்திகை 19-உ

## ராயல் கமிஷன். பஹிஷ்காரப் புரட்டு.

ராயல் கமிஷனை பகிஷ்காரம் செய்ய வேண்டும் என்கின்ற கூச்சல் பத்திரிகைகளில் வரவர பெரிய எழுத்துக்களால் எழுதப்படுகின்றதே தவிர காரியத்தில் குறைந்து கொண்டே போகின்றது.

பொதுவாக கூறுமிடத்து மகமதிய பொது ஜனங்கள் சற்றேறக்குறைய யாவரும் பகிஷ்காரத்திற்கு விரோதமாகவே இருக்கின்றார்கள்.

உத்தியோகப்பேய் பிடித்தவர்களும் அரசியல் வாழ்வுக்காரர்களுமான ஒரு கை விரலுக்குள் அடங்கின சில பேர்கள் மாத்திரம் தான் பகிஷ்காரப்புரட்டில் சேர்ந்திருக்கிறார்கள். மற்ற மகமதிய தலைவர்கள் எல்லோரும் பகிஷ்காரத்தை வெறுக்கிறார்கள். அது போலவே கிருஸ்தவர்களிலும் மேல்கண்ட கூட்டத்தைச் சேர்ந்த ஸ்ரீ ஜார்ஜ் ஜோசப்பு தவிர வேறு பெயர்கள் பகிஷ்கரிக்க காணப்படுவதாய் சொல்வதற்கில்லை.

இவ்விரு சமூக பொதுக் கூட்டங்களும் எல்லா பத்திரிக்கைகளும் பகிஷ்காரத்தை பலமாய் கண்டிக்கின்றன. இது தவிர இந்தியா முழுவதிலுமுள்ள ஒடுக்கப்பட்ட வகுப்பார்களாகிய ஆதிதிராவிடர்கள் ஆதி இந்துக்கள் முதலிய சமூகம் அடியோடு பகிஷ்காரத்தை வெறுக்கின்றது.

தமிழ் நாட்டைப் பொருத்தவரையில் பார்த்தாலும் எத்தனை பேர்கள் பகிஷ்காரத்தை ஆதரிக்கிறார்கள் என்பதும் எத்தனை பேர் அதில் சேரவில்லை என்பதும் தெரிய வரும்.

இப்படியிருக்க அரசியலின் பேரால் பிழைக்கும் தலைவர்கள் என்போரும் பத்திரிக்கைகளும் உலகமே பகிஷ்காரத்தை ஆதரிக்கின்றது என்று மனதறிந்த பொய்யை பரப்புகின்றார்கள். இவர்களில் பார்ப்பனர்களைப்பற்றியும் பார்ப்பனப் பத்திரிகைகளைப்பற்றியும் நமக்கு கவலை இல்லை. பார்ப்பனரல்லாத பத்திரிகைகளிலும் சில இக்கூட்டத்தில் சேர்ந்தாப் போட்டு வருவது மிகவும் பரிகசிக்கத் தகுந்தகாரியமாகும். உதாரணமாக 'தமிழ் நாடு' பத்திரிகை முழுப்பூசினிக்காயை சோற்றில் மறைக்கப் பார்க்கின்றது.

காங்கிரஸ் என்பது பார்ப்பனர்களின் சூழ்ச்சி இயக்கம் என்றும் அவர்கள் அதை வசப்படுத்திக்கொண்டு தங்கள் இஷ்டப்படி மக்களை ஆட்டி வருகின்றார்கள் என்றும் ஒப்புக்கொண்டவர்கள் காங்கிரஸ் அபிப்பிராயத்தைப் பொது ஜன அபிப்பிராயம் என்று சொல்ல முன்வரமாட்டார்கள் என்றே நினைக்கின்றோம். தவிர மிதவாதிகள் என்போர்கள் நமது நாட்டில் முன்றே முக்கால் பேர்வழிகள்தான். அவர்களும் தேசத்தைக் காட்டி கொடுத்த விபீஷணாழ்வாருக்குச் சமானமானவர்கள் என்று சொல்லப்பட்டவர்கள். மிதவாதிகள் அபிப்பிராயத்தை பொது ஜன அபிப்பிராயமென்று சொல்ல முன்வரமாட்டார்கள் என்று நினைக்கின்றோம். மற்றபடி வேறு யார் யார் பகிஷ்காரத்தை ஆதரிக்கின்றார்கள் என்று பார்த்தால் மூன்றில் ஒருவர் மாத்திரம் ஆதரிக்கவில்லை. பாக்கி இரண்டு பேர் ஒப்புக்கொள்ளவில்லை என்று சொல்லும்பழமொழிபோல்தான் இருக்கிறது. இந்த நிலையில் இந்தியா ஒட்டுக்கும் பகிஷ்காரப் பிரசாரம் செய்ய கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கின்றது என்று சில ஆசாமிகள் பெயர் விளம்பரமாயிருக்கின்றது. அதில் மொத்தம் ஆசாமிகள் 10; இதில் 6 பேர்கள் சென்னைவாசிகள். அதில் மூன்று பேர் பார்ப்பனர்கள். அதிலும் ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார் எ. ரங்கசாமி அய்யங்கார் இவர்கள் யோக்கியதையை வெளியாக்கவும் அவர்கள் எவ்வளவு நாணயமும் தேச பக்தியும் பார்ப்பனரல்லாதார் விஷயத்தில் எப்படிப் பட்டவர்கள் என்று அறிய காலத்தையும் இன்னையும் சிலவழிக்காமலே ஜனங்களுக்குத் தெரியக்கூடும் என்று நினைக்கின்றோம். மற்றொரு பார்ப்பனரான ஸ்ரீ சிவராவோ, ஸ்ரீமதி பெசண்டம்மையாருடைய சிஷ்ய கோஷ்டியில் சேர்ந்தவர். அவருக்கு எவ்வளவு சுவாதீன புத்தி இருந்து வந்திருக்கின்றது என்பதை விளக்கவேண்டியதில்லை. மற்ற மூன்று பேர் என்பவர்கள் ஸ்ரீமதி பெசண்டம்மையார், ஸ்ரீமதி ஜினராஜதாச, ஸ்ரீமதி கசின்ஸ் ஆகிய பெண்மணிகள். இவர்கள் மூவரும் சரீரம் மூன்றாயிருந்தாலும் பிரம்மஞான சங்க வைபவத்தில் மனம் ஒன்று என்றே சொல்ல வேண்டும். ஆக கமிட்டி மெம்பர் 10 பேரில் சென்னைக்காரர்களே மெஜாரிட்டியான ஆறுபேர் ஆவார்கள். அம்மெஜாரிட்டியும் ஐயங்கார் பிரதிநிதியும்ஐயர் பிரதிநிதியுமான பெசண்டம்மையும் ஆகிய இருவர் அபிப்பிராயமே இந்தியா ஒட்டுக்கும் ஏற்படுத்தின கமிட்டிக்கு மெஜாரிட்டி ஆகிவிட்டது. மீதி நால்வர்களில் நால்வர்களும் வெளிநாட்டுமகமதியர்கள் அந்நால்வரும் மகமதிய சமூகஇயக்கங்களுக்கும் மகமதியசமூகபத்திரிகைகளுக்கும் விரோதமான கொள்கைக்காரர்கள். இதில் சிலர் அவரவர்களுக்கு அவரவர்கள் பிரதிநிதிகள் என்று கூட சொல்லமுடியாது.

மகமதிய சமூகம் இவர்களை எவ்வளவு தூரம் பின்பற்றுகின்றது என்பதும் இவர்களது அபிப்பிராயத்திற்கு எவ்வளவு தூரம் மகமதிய சமூகம் மதிப்பு கொடுத்து வந்திருக்கின்றது என்பதும் அவரவர்களுக்கே தெரியும்.

எனவே இந்த கமிட்டி முன்னை பகிஷ்கரிக்கவேண்டுமெனவிடுத்த சுற்றறிக்கையில் கையெழுத்து போட்ட கனவான்களுக்கு எந்த விதத்திலும் வித்தியாசப்பட்டவர்களே அல்ல. இவர்கள் போடும் சத்தத்தை நம்பி இந்தியாவே பகிஷ்காரத்திற்கு ஆதரவளிப்பதாக நினைப்பது எவ்வளவு பயித்தியக்காரத்தனமாகும் என்பது நாம் சொல்லாமலே விளங்கிவிடும்.

இப்படியிருக்க சென்னையில்நடைபெறும் 'லோகோபகாரி' என்னும் ஒரு வாரப்பத்திரிகை இந்தப் புரட்டுக் கூட்டத்தில் தன்னையும்சேர்த்து கொண்டதின் கருத்து நமக்கு விளங்கவில்லை. இவ்வளவு மோசமான நிலைக்கு அப்பத்திரிகை இதுவரை வந்ததாக நமக்கு ஞாபகமில்லை.

அது சேர்ந்ததை என்ற தலைப்பின் கீழ் எழுதுவதாவது:—

“மிதவாதிகளும் அமிதவாதிகளும் இந்துக்களும் முஸ்லீம்களும் பகிஷ்காரத்தில் ஒன்று பட்டு வருகிறார்கள். ஒரு சில சுயநலவாதிகளும் உத்தியோக வேட்டைக்காரர்களும் மட்டும் இதில் வேறு பட்டிருக்கின்றார்கள்” என்று எழுதியிருக்கின்றது

இது யார் யாரை மிதவாதி அமிதவாதி என்று நினைத்துக்கொண்டிருக்கின்றதென்றும் யார்யாரை சுயநலவாதி உத்தியோக வேட்டைவாதி என்று நினைத்துக்கொண்டிருக்கின்றதென்றும் நமக்கு விளங்கவில்லை.

லோகோபகாரிக்கு ஸ்ரீநிவாச அய்யங்கார், ரங்கசாமி அய்யங்கார், சிவசாமி அய்யர், சிந்தாமணி அய்யர் முதலானவர்கள் சுயநலமற்றவர்களாகவும் உத்தியோக வேட்டைக்காரர்கள் அல்லாதவர்களாகவும் ஆகிவிட்டாதோடு பகிஷ்கரிக்கக் கூடாது என்று சொல்லுபவர்கள் ஒரு சிலராகவும் சுயநல வாதிகளாகவும், உத்தியோகவேட்டைக்காரர்களாகவும் ஆகிவிடும்படியான அவ்வளவு பெரிய மாறுதல் ஏற்பட்ட ரகசியம் நமக்கு தெரியவில்லை. “லோகோபகாரி” யோக்கியப் பொறுப்புள்ள பத்திரிகையாயிருக்குமானால் பகிஷ்கரிக்கக்கூடாது என்கின்றவர்களான உத்தியோக வேட்டையும் சுயநலமும் உள்ள ஒரு சிலரின் பெயரைக் குறிக்குமென்று எதிர் பார்க்கின்றோம்.

இந்த நிலைக்கு 'லோகோபகாரி' வரநேர்ந்ததற்கு நாம் மிகுதியும் இரங்குகின்றோம். 'லோகோபகாரி' யின் தற்கால நிலை 'தமிழ் நாடு' பத்திரிக்கையை எவ்வளவோ நல்லதாக்கி விட்டது.

'தமிழ்நாடு' பத்திரிக்கைக்கும் ஒரு சகோதரன் இருக்கின்றது என்பதை காட்டிவிட்டது. பெசண்டம்மையார் ஆதிக்கம் வலுக்க வலுக்க இன்னமும் யார் யார் நிலைமை

## மனுதர்ம சாஸ்திரம்.

சுயமரியாதை இயக்கம் ஏற்பட்டபிறகு மக்களுக்கு எங்குபார்த்தாலும் மனிதரின் சுயமரியாதைக்கு விரோதமான ஆதாரங்களை ஒழிப்பதில் கவலையும் ஊக்கமும் அதிகமாகி வருகின்றது. சென்னை, வட ஆற்காடு, சேலம், தஞ்சை, திருநெல்வேலி, மதுரை முதலிய இடங்களில் கூடிய பல மகாநாடுகளில் வர்ணாசிரம தர்மம் என்பதை கண்டித்திருப்பதுடன் அதற்கு ஆதாரமான புஸ்தகங்களையும் பஹிஷ்கரிக்கத் தீர்மானங்களும் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றன. சில மகாநாடுகள் மனுதர்ம சாஸ்திரத்தை நெருப்பில் கொளுத்தி சாம்பலைக் காற்றில் தூற்றியும் வந்திருக்கின்றன.

அரசாங்கமும் சட்டசபை மெம்பர்களும் இதைக் கவனிக்கப் போகிறார்களா என்று தீர்மானிக்க முடியவில்லை. பழைய காலமா எப்படி ஆகும் என்பது முடிவுகட்ட முடியாததுதான்.

நமது நாடு எவ்வளவு பைத்தியகாரத்தனத்தில் இருக்கின்றது என்பதும், யார் வேண்டுமானாலும் பாமர மக்களை ஏமாற்றக் கூடும் என்ற நிலையில் இருக்கின்றது என்பதையும் அறிய இதைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டுமென்று கேட்கின்றோம்.

ஒத்துழையாமையை வஞ்சித்த ஆள்களிடம், அதை ஒழித்த ஆள்களிடம், நல்ல சமயத்தில் மோசம் செய்த ஆள்களிடம், ஒரு சமூகத்தாரின் ஆதிக்கத்தை அழித்து அடிமைப்படுத்துவதுதான் எங்கள் கொள்கை என்று சொல்லுகின்ற ஆள்களிடம், அதையே காங்கிரஸ் கொள்கை என்கின்ற ஆள்களிடம் அபிமானம் ஏற்பட்டு அவர்களை பின்பற்ற வேண்டிய அவசியம் சிலருக்கு வருமானால் அவர்களைப் பின்பற்றி நாடு வரவேண்டுமா என்று கேட்கின்றோம்.

ஒரே ஒரு விஷயத்தை மாத்திரம் சொல்லி இதை இப்போது முடிக்கின்றோம்.

இப்போதைய பஹிஷ்கார இயக்கம் மகமதியர்களுக்கும் தென்னாட்டு பார்ப்பனரல்லாதாருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் விரோதமான பலனைத் தரத்தக்கது என்று அந்த கருத்தைக் கொண்டே ஆரம்பிக்கப்பட்டது என்றும், உறுதியாய்ச் சொல்லுவோம். இந்த கமிஷனால் மேல்கண்ட கூட்டத்தாரின் சுயமரியாதைக்கு ஏதாவது அனுகூலம் ஏற்படுமானால் அந்த சந்தர்ப்பத்தை யாரும் இழந்து விடக் கூடாது. அரசியல் சம்பந்தமான உரிமைகள் என்பது நமக்கு வருவதைவிட வராதொழிவதே மேலானதாகும். ஏனெனில் எதுவந்தாலும் அது உத்தியோகமாகத்தான் இருக்கும். பார்ப்பனர்களுக்கும் ஆங்கிலம் படித்த கூட்டத்தார் என்கின்ற சிலரின் சுயநலத்திற்குந்தான் உதவும். பாமரமக்களுக்கு யாதொரு பலனும் கண்டிப்பாய் உண்டாகாது என்பது உறுதி. நரகம் வரினும் சரி, தேசத்துரோக பாவம் சுற்றினும் சரி, சுயநலப் பழி வரினும் சரி, ஒன்றுக்கும் அஞ்சாமல் சுயமரியாதை அடைய முயல்வதே முக்கிய கடமையாகும்.

யிருந்திருக்குமானால் இம்மாதிரி பெரும்பான்மையான மக்களுக்கேற்பட்டிருக்கும் உணர்ச்சியை மதித்து அரசாங்கமானது வருணாசிரமத்தை அழித்து சட்டம் செய்திருக்கும் என்பதோடு வருணாசிரமக் கொள்கைக்காரர்களை கழுவிலேற்றி இருக்கும் என்றுங்கூட சொல்லலாம். ஏனெனில் பிரபாரிசளான 8,000 சமணர்கள் கழுவேற்றப்பட்டதாக சொல்லும் சரித்திரத்தைப் பார்த்தபோது இவ்வளவு அக்கிரமும் ஜீவகாருண்யமும் அறிவும் அற்றதன்மையான கொடுமையை சகித்துக் கொண்டிருக்கும் என்றும் யாரும் சொல்லமுடியாது. நமது அரசாங்கங்கள் பழயகால அரசாங்கங்களைப் பின்பற்றிக் கழுவேற்றா விட்டாலும் சட்டமூலம் கொடுமைகளை ஒழிக்கவாவது உதவவேண்டாமா என்று கேட்கின்றோம்.

ஒருக்கால் மத விஷயத்தில் தலையிடமுடியாது என்று சொல்வார்களானால், மத விஷயங்களையாவது கவனித்து மதத்தில் எப்படி சொல்லியிருக்கின்றதோ யார் யாருக்கு என்ன என்ன வேலை இடப்பட்டிருக்கின்றதோ, யார் யாரின் நடத்தை எப்படி இருக்கவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கின்றதோ அப்படியாவது நடக்கும்படி பார்க்கவேண்டும். அப்படியும் இல்லாமல் இப்படியுமில்லாமல் பார்ப்பானும் வெள்ளைக்காரனும் மாத்திரம் பிழைக்க என்ன என்ன மாதிரி நடக்க வேண்டுமோ எப்படி எப்படி சீர்திருத்தம் செய்யவேண்டுமோ அப்படியெல்லாம் சூழ்ச்சிகள் செய்துகொண்டு மத விஷயத்தில் பிரவேசிக்கமாட்டோம் என்று சொல்வது வடிகட்டின அயோக்கியத்தனமாகுமென்றே சொல்லுவோம்.

இச்சூழ்ச்சிகளைப் பார்க்கும்போது இது சமயம் மகம்மதிய அரசாங்கத்தில் வாழும் யோக்கியதையாவது நமக்குக் கிடைக்காதா என்று ஆசைப்பட வேண்டியதாயிருக்கின்றது. காரணமென்னவென்றால், வீரர் கமால்பாஷா அவர்கள் ஒரு அரசவிசாரணைக்கு கொரானை ஆதாரமாக காட்டியபோது 'அது அக்காலத்து சங்கதி இக்காலத்திற்கு செல்லாது' என்று அதைப்பிடுங்கி வீசி எறிந்தாராம். குரான் வாக்கியம் செதுக்கப்பட்ட இடங்களையெல்லாம் அழித்து சுயமரியாதையையும் கைத்தொழிலையும் கவனியுங்கள் என்று எழுதிவருகிறாராம். மகம்மதியரைவிட வெள்ளைக்காரருக்கும் பார்ப்பனர்களுக்கும் மத பக்தி யிருக்கின்றது என்று சொன்னால் எந்த பைத்தியக்காரராவது நம்பமுடியுமா என்று கேட்கின்றோம்.

எனவே, மதம் என்கிற புரட்டுகளையும் மதாச்சாரியர்கள் என்கின்ற அயோக்கியர்களையும் சாஸ்திரம், வேதம், புராணம் என்பவைகளாகிய அதர்ம அக்கிரம ஆதாரங்களையும் குருட்டுத்தனமாய் பின்பற்றாமல் அன்பு ஜீவகாருண்யம், அறிவு, சத்தியம், என்பவைகளை ஆதாரமாய் வைத்து அவற்றிற்கு விரோதமாய் உள்ளவைகளையெல்லாம் அடியோடு ஒழிப்பதற்கு முற்படவேண்டியதுதான் பகுத்தறிவுள்ள மனிதன் கடமை. ஆதலால் அதற்கு ஒவ்வொருவரும் முற்படவேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகின்றோம்.

### சர். பி. ராஜகோபாலாச்சாரியார்

சர். பி. ராஜகோபாலாச்சாரியார் பெங்களூரில் காலமானதாகக்கேட்டு வருத்தமடைகின்றோம்.

அவர் வித்தியாசம் பாராட்டாதவர் மூட கொள்கைகளில் நம்பிக்கையில்லாதவர் உத்தியோகத்திலும் கூடுமான வரை யோக்கியமாய் நடந்துக்கொண்டவர். பார்ப்பனரல்லாதார் அநேகரின் அன்புக்கும் விஸ்வாசத்திற்கும் பாத்திரமாயிருந்தவர் உத்தியோகமுறையில் பார்ப்பனரல்லாதாருக்கு சிறிதாவது நன்மை செய்த பார்ப்பனர் இருப்பாரானால் அதில் ஸ்ரீமான் சர். பி. ராஜகோபாலாசாரியாரே முதன்மையானவர்.

அவரது குடும்பத்திற்கு நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

### கோயமுத்தூர் சரஸ்வதி கான சபா சிறப்பு விழா,

டிசம்பர் 11 தேதி புதன்கிழமை காலை 8 மணிக்கு கோயமுத்தூரில் ஸ்ரீ சரஸ்வதி கான சபா சிறப்பு விழா ஈரோடு ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் தலைமையில் நடைபெறும். அது சமயம் வித்வான்களான திருவாளர்கள் காஞ்சீபுரம் நயினாப்பிள்ளை என்கிற சி. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள், திருச்சி பிடில், கோவிந்தசாமி பிள்ளை அவர்கள், புதுக்கோட்டை கஞ்சிரா, தக்ஷிணாமூர்த்தி பிள்ளை அவர்கள் பழனி மிருதங்கம், முத்துபிள்ளை அவர்கள் மன்னார்குடி கொனகோல் பக்கிரியாபிள்ளை அவர்கள், ஆகியோர்களும் விஜயம் செய்வார்கள். அன்று இரவு சபாவின் ஆதரவில் சங்கீதக் கச்சேரியும் நடக்கும்.


கோயமுத்தூர் டவுன் பாங்கு
(லிமிடெட்)
பிராஞ்சு ஈரோடு
**நோட்டீஸ்.**

கோயமுத்தூர் டவுன் பாங்கின் பிராஞ்சு ஆபீசானது ஈரோடு கடைத் தெருவுக்கு அடுத்த மெக்ரீகர் வீதியில் 23/1.S.696 நெ. கட்டடத்தில் 1927 ௵ டிசம்பர் ௴ 4 தேதி ஞாயிற்றுக்கிழமை முதல் புதிதாய் ஸ்தாபிக்கப்பட்டு வரவு செலவு நடத்தப்படும். ஷை பாங்கில் நகைகளின் பேரிலும் சாக்குகளின் பேரிலும் சலீசான வட்டிக்கு கடன் கொடுக்கப்படும்.

| | |
|---|---|
| M. அப்பே கவுடர் | B. நஞ்சுண்டகவுடர் |
| Hony. | Hony. Asst. |
| செகரிடரி. | செகரிடரி. |


### ஸ்ரீமான் நாயக்கர்.

டிசம்பர் 10, 11, 12, 13 தேதிகளில் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் திருச்சி ஜில்லாவில் சுற்றுப்பிரயாணம் செய்வார். ஆங்காங்கு சுயமரியாதை சங்கங்கள் ஸ்தாபிக்கப்படும்.

## யானமற்ற ஜாதி.

மதுரையில் 29—11—27ல் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் செய்த பிரசங்கத்தில் யாரோ ஒரு காங்கிரஸ் தொண்டர் ஸ்ரீ நாயக்கரை பல கேள்விகள் கேட்டதாகவும் அதனால் குழப்ப முண்டானதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். இது உண்மையல்ல. நாயக்கரை யாரும் எவ்வித கேள்வியும் கேட்கவில்லை. ஒருவர் பண்டிதர், பண்டிதர் என்று சத்தம் போட்டார். அதற்கு அங்கு இருந்தவர் அவரை கலகம் செய்ய வந்திருக்கிறார் என்று சந்தேகப்பட்டு கண்டித்துமேடையில் கொண்டுவந்து உட்கார வைத்தார்கள். கூட்டங்கலையும்வரை பேசாமல் உடகார்ந்திருந்து விட்டு போய்விட்டார்.

அது சமயம் நாயக்கரும் சத்தம் போட்டவரையும், அவரைக் கண்டித்தவர்களையும், அவரை கூட்டிவந்து உட்கார வைத்தவர்களையும் தக்கபடி கண்டித்துவிட்டு இம்மாதிரி சிறுவிஷயங்களை நாளையதினம் சில அயோக்கிய பத்திரிகைகளும் அயோக்கிய நிருபர்களும் கூட்டத்தில் குழப்பம் என்றும் கேள்விகளென்றும் எழுதி இக்கூட்டத்தின் பெருமையைக் கெடுக்க சூழ்ச்சி செய்வார்கள் என்றும் சொன்னார். பார்ப்பனப் பத்திரிகைகளும் பத்திரிகை நிருபர்களும் பெரும்பாலும் ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் என்ன பேசினார் என்பதை எழுதுவதற்கு தைரியம் இல்லாமல் ஈனத்தனமாய் நடந்துகொள்வதோடு கூட்டத்தைப்பற்றி குறைகூற பிரயத்தனப்படுவதில் கொஞ்சமாவது வெட்கப்பட்டு பின் வாங்குவதில்லை.

இதைப்பற்றி எவ்வளவு கண்டித்தாலும் வைதாலும் அந்த ஈன ஜாதிகளுக்கு ரோஷம் மானம் வெட்கம் என்பது இல்லாமல் இத்தொழிலை விடாமல் செய்துவருகின்றனர். இவ்வளவு காலம் இவ்வளவு பெரிய அக்கிரமங்கள் செய்து கொண்டும் இன்னமும் இச்சாதி உயிர்வாழ ஏற்பட்ட காரணமே அடியோடு மானத்தையும் வெட்கத்தையும் விட்டுவிட்டதாலும் உலகத்திலுள்ள ஈனத்தையெல்லாம் தங்களுக்கே சொந்தமாக்கிக் கொண்டதாலுமே அல்லாமல் வேறில்லை. ஒன்று இந்த ஜாதி ஒழியவேண்டும். அல்லது இந்த ஜாதிக்கு யானம் ஏற்படும்படி செய்யவேண்டும். இவற்றுள் இரண்டில் ஒன்று ஏற்படாதவரை இவர்கள் உள்ள நாட்டிற்கு விடுதலை இல்லை என்பது உறுதி.

## இந்திய சட்டசபை மெம்பருக்கு ஓர் வேண்டுகோள்.

இந்திய சட்ட சபையில் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதையை உத்தேசித்து சட்ட சம்பந்தமாக பல வேலைகள் செய்ய வேண்டி இருக்கிறது.

குறிப்பாக இந்து லாவில் பிராமணன் சூத்திரன் என்கிற பாகுபாடுகளும் அதற்கு தக்கபடி பிராமணன் என்பவனுக்கு ஒரு விதமாகவும் சூத்திரன் என்பவனுக்கு ஒரு விதமாகவும் சட்டங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளை சட்டத்தில் வைத்துக்கொண்டிருப்பது நியாயமா என்று கேட்கின்றோம்.

ஒரு பார்ப்பன இந்திய சட்ட சபை மெம்பர் கூட இம்மாதிரி பிராமணன் சூத்திரன் என்கின்ற வித்தியாசம் சட்டத்தில் இருக்கக்கூடாது என்று சொல்லி ஒப்புக்கொண்டாலுங் கூட பார்ப்பனரல்லாத மெம்பருக்கு உணர்ச்சி வரவேண்டாமா என்று கேட்கின்றோம். ஸ்ரீமான் ஷண்முகம் செட்டியார் அவர்களுக்கு உபயோக மற்றதும் வேஷமானதுமான ராயல் கமிஷன் பகிஷ்காரத்தில் இருக்கும் சுறுசுறுப்பில் ஏதாவது ஒரு பகுதியாவது இந்த சூத்திரப்பட்டமும் பாரபக்ஷமும் ஒழிவதில் கவலை இருக்கவேண்டாமா என்று கேட்கின்றோம். இனி உள்ள நாள்களையும் இது போல வீணே கழிக்காமல் காரியவழியில் கழிக்கும்படியாய் மிகவும் வணக்கமாய் கேட்டுக்கொள்ளுகின்றோம்,

## வேண்டுகோள்.

### வேலை நிறுத்தம் S. I. R. ரயில்வே வேலை நிறுத்தம்.

தென்னிந்திய மகாஜனங்களுக்கு தென்னிந்திய ரயில்வே தொழிலாள மத்திய சங்கத்தார் தெரிவித்துக்கொள்ளும் விண்ணப்பம்:—

ரயில்வே தொழிலாளர்கள் விஷயமாய் தென்னிந்திய ரயில்வே அதிகாரிகளால் கையாளப்பட்டு வருகிற தாங்கமுடியாத அக்கிரமத்தை எங்களால் பொறுக்கமுடியவில்லை.

நம்நாட்டிலே நம்முடைய ஜனங்களிடத்தில் கோடிக்கணக்கான பெருவாரியான லாபத்தை திரட்டிக்கொண்டு போகும் நம் ரயில்வே கம்பெனியார் நம் இந்தியத் தொழிலாளர்களை மிகவும் கொடுமைப்படுத்தி வருவதுடன் அவர்கள் வயிற்றிலே மண்ணை ப்போட ஆரம்பித்து விட்டார்கள். நாங்கள் இதைப்பற்றி பன்முறை எங்கள் அதிகாரிகளிடம் எடுத்துச் சொல்லி அவர்களை எவ்வளவோ தூரம் கெஞ்சிக் கேட்டும் யாதொரு பலனில்லாததால் முடிவில் பொது வேலை நிறுத்தத்தை தவிர எங்களுக்கு வேறு வழியில்லை யென முடிவுசெய்து விட்டோம். ஆகவே இந்திய மக்களாகிய உங்களுக்கு எங்களால் ரயில பிரயாணங்களில் கஷ்டமும் நஷ்டமும் ஏமாற்றமும் ஏற்படாதிருக்கவேண்டி இந்த அறிக்கையை இப்போதே வெளியிட்டிருக்கிறோம். அதாவது நாளது 1927-ம் வருஷம் டிசம்பர் மாதம் 12-ந் தேதியிலிருந்து அம்மாதம் முடிவுக்குள் தென்னிந்திய ரயில்வே முழுவதும் பொது வேலை நிறுத்தம் ஏற்படக்கூடுமாகையால், அதற்குள் தாங்கள் தங்களுடைய பிரயாண வியாபார போக்கு வரத்துகளுக்கு வேண்டிய ஏற்பாடு செய்து கொள்வதோடு ரயில்வே அதிகாரிகளின் நடத்தையால் செய்து தீரவேண்டியதாய் ஏற்பட்ட எங்கள் பொது வேலை நிறுத்தத்தில் அனுதாபங்காட்டி எங்களுக்கு வேண்டிய உதவி புரியமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

(S. I. Ry) தொழிலாள மத்திய சங்க வேலை நிறுத்த கமிட்டியார்.

## துருக்கியின் முன்னேற்றமும் முஸ்தபா கமால் பாஷாவும்.

### துருக்கியில் ஒரு ராமசாமி நாயக்கர்.

உலகிலுள்ள நாடுகளில் எந்த நாடு சமயத்தை அதி முக்கியமாகக் கொண்டு சமய ஆசாரியர்கள் என்னப்பட்ட குருக்கள்மார் கையில் அகப்பட்டு உழல்கின்றதோ அந்நாடுகள் யாவும் பண்ணுள் பிற்போக்கிலேயிருந்து, மற்ற நாட்டார் நகைக்க இடம்தந்து கீழ் நிலையிலேயே இருக்கின்றன. எந்நாடு சமயத்தை இரண்டாவது படியாகக்கொண்டோ, அரசியலுக்கும் சமயத்துக்கும் பற்றில்லாமலோ, சமய குருக்களை அரசியலுக்கு அப்புறப்படுத்தி பொது மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி ஊட்டி வைக்கின்றதோ அந்நாடே மேன்மை யுற்றிருக்கின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக தற்காலத்தில் நம் முன் நிற்பது துருக்கி தேசம். முஸ்தபா கமால் பாஷா அந்நாட்டிற்குத் தலைவரானதும் செய்த சீர்திருத்தங்களில் அதிமுக்கியமானவை சமயத்தின் பேரால் வளர்ந்து வந்திருந்த சோம்பேரிமடங்களை தகர்த்தெறிந்ததும் பக்கிரிக்கூட்டங்களை தகர்த்தெரிந்ததும் பகிரிக்கூட்டங்களை யொழித்து கிலாபத்து என்னும் சமய சம்பந்தத்தை யொழித்ததேயாகும். இனி அவர் சமயத்தையும் அரசியல்களையும் எவ்வாறு பிரித்து நடத்தி வருகின்றார் என்பதையும் அரனுல் நாட்டின் வளத்தை எவ்வாறு கருதுகின்றாரென்றும் பின்வருவனவற்றைப்படித்தால் நன்கு விளங்கும். இவை 'யங் முஸ்லீம்' என்ற பத்திரிகையில் கண்டவை. துருக்கி தேசத்தில் நடந்த பெருமகா நாட்டில் ஆறுநாள் பேசிய பேச்சில் அவர் சொன்னதாவது.

1\. 1924 ஆண்டில் துருக்கிதேசத்தின் அரசியல் சமயம் இஸ்லாம் என்று பிறந்த கட்டளையை உடனே கூடிய சீக்கிரத்தில் ரத்து செய்ய வேண்டும். அவ்வாறு அப்போது செய்து அக்காலத்து இருந்தோரை கண்துடைக்க ஏற்பட்ட ஒப்பந்தமே ஒழிய வேறில்லை. புதிய துருக்கி அரசியலுக்கும் சமயத்திற்கும் யாதொரு தொடர்பும் கிடையாது. கமால் பாஷா சமயத்தைப் பற்றி யாது சொன்ன போதிலும் அதை பொது மக்கள் ஆவலோடு ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கின்றார்கள்.

2\. ஒரு காலத்தில் ஒரு பள்ளிக்கூடத்தை புதிதாகத் திறக்கச் சென்ற போது முன்னே சென்ற சமயப்புரோகிதரை இழுத்து அப்புறம் தள்ளி விட்டு. நீர் கடவுள் வாழ்த்துச் சொல்லுவது அப்புறம்; முதலில் நாட்டுத் தலைவன் முன்னே செல்ல வேண்டுமென்றார்.

3\. மற்றொரு காலத்தில் பல உத்தியோகஸ்தர்கள் கூடி விசாரணை நடக்கின்ற போது இவர் சொன்னவைகளுக்கு விரோதமாக கொரானில் ஆதாரம் காட்டியபோது அக்கொரானை விசிறியெறிந்துவிட்டு "கொரானில் சொல்லப்பட்டவை அக்காலத்தில். மக்களுக்கு இக்காலத்து அல்ல" வென்றார்.

4\. இம்மாதிரியாக கொரானிலிருந்து பல வாக்கியங்கள் செதுக்கப்பட்டிருந்த சுவர்கள், கோபுரங்களெல்லாம் இப்போது 'நாட்டு கைத்தொழிலை ஆதரியுங்கள் ஆகாய விமானம் வாங்க பணம் கொடுத்து லாட்டரி டிக்கட்டு வாங்குங்கள் என்ற வாக்கியங்களால் செதுக்கப்பட்டிருக்கின்றன.

மதம் மதம் என்று வாய்ப்பறை அறைந்து கீழ் நிலையடைந்த துருக்கி தேசம் அம்மதப்பற்றை யொழித்த அந்நாளே சிறப்புற்று ஓங்கத் தலைப்பட்டது. நம் நாடு எந்நாளைக்கு இந்தத் துருக்கியைப் பின்பற்றுமோ அறிகிலேம் என்று சி. இராஜரத்தினம் எழுதுகிறார். 'திராவிடன்'

(௬-ம் பக்கத் தொடர்ச்சி)

சுயமரியாதை.

சுயமரியாதை இயக்க மென்றோரியக்கம் தோன்றிய காலத்தில் பலர் பல பல விதமாகப் பேசியதுண்டு. ஆனால் இப்பொழுதோவெனில் இவ்வியக்கம் பலரால் ஒப்புக்கொள்ளக்கூடியதாயும் மனிதனுடைய வாழ்விற்கும் உலக முற்போக்குக்கும் இன்றியமையாததென நம்மக்கள் உணர ஆரம்பித்துவிட்டார்கள். உணர்ந்தும் வருகிறார்கள். இப்பொழுது எங்கு பார்த்தாலும் சுயமரியாதைப் பேச்சாகத்தா னிருக்கிறது. நம் நாடு வெளி நாடு தேசிய வாதிகளுங்கூட இச்சுயமரியாதையென்னும் வார்த்தையை உபயோகிக்க ஆரம்பித்து விட்டார்கள். ஸ்ரீ காந்தியும் சுயமரியாதையைப்பற்றி பேசுகிறார். ஒத்துழையாமையே சுயமரியாதைக்காக ஆரம்பித்ததே ஒழிய சுயராஜ்ஜியத்திற்காக அல்ல. இப்பொழுது கொஞ்சகாலமாய் நமது நாட்டில் நடந்துவரும் ராயல் கமிஷன் பகிஷ்காரம் என்கின்ற கூச்சல் கூட சுயமரியாதைக்காகத்தான் என்று சொல்லுகிறார்கள்.

இச்சுயமரியாதைச் சங்கத்தின் கொள்கைகள் என்னவெனிலோ, பிறப்பில் உயர்வு தாழ்வில்லை என்பதும், மேல் கீழ் இல்லையென்பதும் தானேயல்லாமல் எந்த தனி வகுப்பாரையும் இழிவு படுத்தவில்லை யென்பதையும் உங்களுக்கு நினைப்பூட்டுகின்றேன். ஆனால் நம் நாட்டுப் பார்ப்பனர்கள் தங்களை ஏதோ துவேஷிப்பதாகக் கூறிவருகின்றனர். இது அக்கூட்டத்தாரின் யோசனையின்மையாலும் பேராசையாலுமே ஏற்படுகிறது. ஆனால் தாழ்த்தப்பட்டவர்களென்று சொல்லிக்கொள்ளுகிறவர்களுக்கும் நயக்கும் சுயமரியாதை தத்துவம் எவ்வளவு பயன்படுகிறதோ அதைவிட அதிகமாக பார்ப்பனர்களுக்கும் பயனுண்டு.

பார்ப்பனரல்லாதாராகிய நாம் எவ்வளவு தூரம் இழிவுபடுத்தி வைக்கப்பட்டிருக்கின்றோமோ அந்த அளவுக்கு பார்ப்பனர்கள் சுகம் அனுபவித்து வருகிறார்கள். நாம் எவ்வளவுக்கெவ்வளவு கொடுமையுடன் நடத்தப்படுகின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களுக்கு நன்மையாகவே இருக்கிறது. இவ்வியக்கத்தின் பயனால் நாம் மாத்திரம் சுகப்படுவதல்லாமல் பார்ப்பனர்களும் இதன் மூலமாய் தங்கள் இழிவைப் போக்கிக் கொள்ளுகிறவர்களாகிறார்கள். உண்மையாக கடைசியாக இவ்வியக்கத்தால் யாருக்காவது கடுகளவாவது துன்பம் நேரிடுமா என்றால் இல்லவே இல்லை. ஆனால் அரசாங்கத்தாருக்கு மாத்திரம் கொஞ்சகாலத்திற்கு கஷ்டமாகத்தானிருக்கும். ஏனெனில் நாம் எவ்வளவு தூரம் சுயமரியாதை யற்றிருக்கின்றோமோ அவ்வளவு தூரம் நம்மை இழிவுபடுத்தி நம்மிடமிருந்து அவர்கள் கொள்ளையடித்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் அவர்களுக்குங்கூட கொஞ்ச நாளைக்குள் புத்தி வந்துவிடும். எத்தனை நாளைக்குத்தான் தூங்குகிறவன் தொடையில் கயிறு திரிப்பதென்று சொல்லி விலகிவிடுவார்கள். பின்னர் யாரும் சுதந்தரத்துடன் வாழலாம். ஆகையால் வாழ்க்கையின் பரிசுத்தத்திற்கும் சுயமரியாதையே அடிப்படையானது. இதைப்பற்றி எத்தனையோ பெரியார்கள் கூறியிருக்கின்றனர். கவரிமான் ஒரு மயிரிழப்பின் உயிர் வாழாது என்பதுபோல் மனிதனும் மானமழிந்து வாழவிரும்பான். ஆகவே நம் மானத்தை நாம் காப்பாற்றிக்கொள்ளவேண்டுமானால், மனிதத் தன்மையோடிசைந்த வாழ்க்கை நடத்தவேண்டுமென்றால் சுயமரியாதைதான் வேண்டற்பாலது. இப்பொழுது மணி 12 ஆகிவிட்டது. மீண்டும் மாலையில் இம்மகாநாடு கூடவேண்டியிருப்பதால் இத்துடன் எனது பிரசங்கத்தை முடித்துக்கொள்வதுடன் எனக்கு அன்புடன் இவ்வக்கிராசனப் பதவியை அளித்த அன்பர்களுக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்திக்கொள்ளுகிறேன் என்று ஆசனத்தமர்ந்தார். காரிய தரிசியால் அழகிரிசாமி நாயுடு அவர்களும் எஸ் வி லிங்கமும் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டார்கள். இத்துடன் காலை மகாநாட்டு ஆரம்பம் முடிந்து பகல் போஜனத்திற்குச் சென்றார்கள். பகல் 2-30 மணிக்கு மீண்டும் மகாநாடு கூடியது.

---

# ராயல் கமிஷன் பகிஷ்காரப் புரட்டு

கார்குடி திரு. ஆர். சின்னையாபிள்ளை அவர்களின் அபிப்பிராயம்.

ராயல் கமிஷன் பகிஷ்கார பிரசாரத்திற்கு மூன்று காரணங்கள் வெளியில் சொல்லிக் கொள்கிறார்கள். முதலாவது இந்தியர்களுக்குக் கமிஷனில் ஸ்தானம் கிடைக்கவில்லை என்பதும், இரண்டாவது ஸ்தானம் கிடைக்காததால் இந்தியர்களை அவமானப்படுத்துகிற தென்பதும், மூன்றாவது ராயல் கமிஷனால் இந்தியாவிற்கு யாதொரு நன்மையும் ஏற்படாது என்பதுமேயாம். முதலாவதாக சொல்லப்பட்ட கமிஷனில் ஸ்தானத்திற்குத் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்களும், மேற்படி ஸ்தானத்திற்காக நாக்கில் எச்சல் ஊறிக்கொண்டிருந்த பார்ப்பனர்களும் அவர்கள் வாலைப் பிடித்துக் கொண்டு திரிகிறவர்களும் பகிஷ்காரம் பகிஷ்காரம் என்று ஊளை இட்டுக்கொண்டிருக்கிறார்கள். கமிஷனில் ஸ்தானம் கொடுப்பதாய் இருந்தால் தற்காலம் தேசமிருக்கிற பிளவுக்கு யார் யாருக்குக் கொடுத்தால் மனம் திருப்தி அடைந்து தேச முழுதும் அவர்களை தங்கள் பிரதிநிதிகள் என்று ஒத்துக்கொள்வார்கள் என்ற சந்தேகம் புலப்படுகிறது. நாட்டில் இந்து முஸ்லீம் சச்சரவுப்படி தினப்படி அநேக கொலைகளைப் பத்திரிகைகளில்பார்த்துக்கொண்டு வருகிறோம். தென் நாட்டில் பார்ப்பனரல்லாதார் பேர் தினசரி வலுவடைந்து வருவதின் பயனாய்ப் பார்ப்பனர்கள் கபடமற்ற அல்லாதாரை ஒரே அடியாய் விழுங்கிவிடலாமென்று சூழ்ச்சிகள் செய்து வருங்காலையில் யார் பிரதிநிதியாய் இருப்பதென்று விளங்கவில்லை. அவ்விதமே ஒவ்வொரு கக்ஷி தலைவரையோ, பிரதிநிதியையோ கமிஷனில் தேர்ந்தெடுப்பதாய் இருந்தாலோ பிரதிநிதிகள் தங்கள் தங்கள் கக்ஷிகளுக்கு சாதகமான பல தரப்பட்ட அபிப்பிராயங்களை ஒருவருக் கொருவர் ஒத்துழைக்க முடியாமல் ஏழை மக்களின் பணத்தை ஏராளமாய் செலவு செய்துவிடுவதுடன்னியில் தான் படித்த படிப்பினுடைய பெருமையை எழுத்து மூலமாக எழுதி அனுப்பி தங்கள் பெயரை விளம்பரப்படுத்திக் கொள்வதைத்தவிர ஏழைகளின் கஷ்டத்தை எடுத்துக்காட்டி நிவர்த்தி செய்யக்கூடிய யோக்கியதை எந்தக் கக்ஷி தலைவருக்காவது பிரதிநிதிக்காவது இருக்கிறதா என்று நாம் கேட்கின்றோம்.

இரண்டாவதாக இந்தியரை சேர்க்காததினால் சுயமரியாதைக்குப் பங்கம் வந்துவிட்டது என்று அலறுவது ஊரை ஏமாற்றும் புரட்டு தனமே தவிர வேறல்ல. இந்தியர்களை சாதி பேதம் இல்லாமல் பீஜி சாபில் அவமானப்படுத்தி கொலை செய்ததும் மாப்பிள்ளைமார்களை மூட்டை மூட்டையாக கூட்ஸ்வண்டியில் ஏற்றி கொலை செய்யவிட்டதும், அவமான மல்லவா? சுயமரியாதை பங்கமல்லவா? இந்தியர்களில் பெரும்பான்மையான இந்துக்கள் தங்கள் மதாச்சார பிரகாரம் தங்கள் வேதங்களை தங்கள் மதத்தைச் சார்ந்த ஒரு சாராரை தவிர மற்றவர்கள் பார்த்தால் கண்ணை பிடுங்கி விடுவது என்பதும், வாசித்தால் நாக்கை அறுத்து விடுவது என்பதும் கேட்டால் காதில் ஈயத்தை காய்ச்சி ஊற்றிவிடுவது என்பதும் இன்னும் இதுபோன்ற அநேக கொடுங்காரியங்களை சொல்லிக் கொள்கிறவர்கள், விபூதி சண்டை நாம சண்டை தீர்த்தச்சண்டை, பட்டசோத்து சண்டை மேளம் அடிக்கிற சண்டை என்ற இன்னும் இது போன்ற ஆயிரக்கணக்கான மூட மதசண்டைகளெல்லாம்கொஞ்சங்கூட இந்து மதத்துக்கு சம்பந்த மில்லாதவரும் கொள்கைக்கு மாறுப்பட்ட மதத்தை அனுசரிக்க கூடிய வருமான வெள்ளையர் ராஜாங்கத்தில் அவர்களின் மூலம் நியாயம் கிடைத்து தீர்த்துவைக்க வேணுமென்று பாரீஸ்டர் நாட்டன் ஜோசப் ஒரு சாகிப்பகதூர் இவர்களிடத்தில் தங்கள மூட வேதத்தையும் ஆதாரமாக காட்டி ஆயிரக்கணக்கான பணத்தையும் கொடுத்து வெள்ளையரிடத்தில் நீதி பெறுவது சுயமரியாதைக்கு பங்கமா அல்லவா என்று ஒவ்வொரு வகுப்பு வாதக்காரர்களையும் கேட்கின்றோம். சீர்திருத்தம் அவர்கள் கொடுக்க வேண்டுமென்றும் அதை நாம் வாங்கி அனுபவிக்க வேண்டும் என்றமுறையில்கொடுக்கும் சக்தியுள்ளவர்கள் தங்களால் கொடுக்கப்பட்டிருப்பதை வாங்கிக் கொண்டவர்கள் சரியாய் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்களா என்று பார்க்கவரும் காலையில் வாங்கி சாப்பிட்டவர்கள் போது மென்றாவது அல்லது போதா தென்றாவது கொடுத்தவர்களிடத்தில் சொல்லிக்கொள்ள வேண்டியதை தவிர கமிஷனுடன் கலந்துகொள்ள வேணுமென்று சொல்லிக் கொள்வது எவ்வளவு அறிவீனத்தனம் என்பது நாம் சொல்லிக்கொள்ளாமலே விளங்கும்,

மூன்றாவதாக இந்தியாவுக்குக் கமிஷனால் யாதொரு நன்மையும் ஏற்படாது என்று சொல்லகூடிய காரணத்தை இது வரையிலும் நாம் கமிஷன் பகிஷ்காரத்தைப்பற்றி ஒரு சில தலைவர்களிடத்திலிருந்து கேள்விப் பட்டதைத் தவிர நாம் பகிஷ்காரப் பத்திரிகையிலாவது மற்றும் தலைவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் தலைவர்களிடத்திலிருந்தாவது நாம் கேள்விப்பட்டதே இல்லை. இதைப்பற்றி நாம் யோசிக்கும் போது சீ சீ இந்தப்பழம் புளிக்கும் என்னுங் கதையைப் போல இருக்கிறது.

தவிர இந்தியர்களால் வழங்கப்படும் எந்த விதசீர் திருத்தங்களும் எந்தக் காலத்திலும் நன்மை பயக்காது என்பது 1919 ம் வருஷத்திலேயே வழங்கப்பட்ட சீர் திருத்தத்திலும் பிறகு பஞ்சாப் படுகொலையாலும் தெரிந்து ஒத்துழையா திட்டம் ஆரம்பித்து இந்திய மக்கள் கூடுமான வரையில் தங்கள் அபிப்பிராய பேதங்களைக் காட்டாமல் ஏகோபித்து ஒத்துழையா திட்டத்தையும் பகிஷ்காரத்தையும் நடத்தி எவ்வளவோ தியாகம் செய்தும் பார்த்தார்கள் அக்காலத்திலும் பகிஷ்காரம் நடந்ததா என்பதைத் தான் கேட்கின்றோம். தேச ஒத்துழைமையான அக்காலத்திலேயே பகிஷ்காரம் பலியாமல் போனபோது, கக்ஷி பிரதிகக்ஷிகளும் சாதிச் சண்டைகளும் குரோத புத்தியும் நிறைந்த இக்காலத்தில் பகிஷ்காரமென்று சொல்லிக் கொள்வது ஏழைகளை ஏமாற்றி ஒரு சாரார் சுய நலத்திற்காக (உத்தியோக வேட்டைக்காக) கதறுகிறார்களே தவிர காரியத்தில் அணுவளவாவது பிரயோஜனப்படாது என்பது தான் நமது தாழ்மையான அபிப்பிராயம்.

ஆகவே பகிஷ்காரமென்பதெல்லாம்வீண் புரட்டு. மக்களை ஏமாற்றி ஒரு கூட்டத்தாருடைய சுயநலத்திற்காக கூக்குரல் இடுகிறார்களே தவிர ஏழைமக்களுக்கு எவ்வித நன்மையும் உண்டாகப்போவதில்லையென்பது நமது துணிபு. ஜாதி சண்டைகளை ஒழித்து வகுப்புவாத மன்னியில் ஏகோபித்து சகோதர தத்துவத்துடன் ஒற்றுமையை நாடி வாழுங் காலத்தில் சீர்திருத்தமாவது பகிஷ்காரமாவது ஒத்துழையாமை திட்டமாவது தேசத்திற்கு வேண்டியதே இல்லாமல் தேச மக்கள் விடுதலை அடைவார்கள் என்பது திண்ணம்.

## "ஆதிதிராவிட காவலன்."

சென்னை சட்ட சபையில் ஆதி திராவிடாது பிரதிநிதியாய் இருந்த கோவை ஸ்ரீமான் ஆர். வீரய்யன் அவர்களால், ஆதி திராவிடாது முன்னேற்றம் குறித்கொண்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கும் "ஆதி திராவிட காவலன்" என்னும் பத்திரிகை நமது பார்வைக்கு வந்தது. அது மாதமிருமுறை, ஆங்கிலம் தமிழ் ஆகிய இரு பாஷைகளிலும் பிரசுரிக்கப்படுகிறது. தீண்டாதார் எனப்படுவோர் விஷயத்தில் அனுதாபங்கொண்ட ஒவ்வொருவரும் அதை வாங்கி வாசித்து ஆதரவளிக்க வேண்டுகிறோம். (ப.—ர்.)

வருட சந்தா ரூபா 1—8—0.
பத்திராதிபர், "ஆதி திராவிட காவலன்"
கோயமுத்தூர்

## சூழ்ச்சி வேண்டாம்.

ராயல் கமிஷனைப்பற்றி 'நவசக்தி' எழுதுவது

இந்தியாவிற்கு வரப்போகும் ராயல் கமிஷனைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று எங்கணும் பேசப்படுகிறது; பகிஷ்காரம் என்று சொல்வோருள் கருத்து வேற்றுமையிருக்கிறது. அவ்வேற்றுமையைச் செவ்வனே வெளியிடாது "பகிஷ்காரம் பகிஷ்காரம்" என்று கூச்சலிடுவது சூழ்ச்சியின் பாற்படும்.

இதற்கு முன் உருக்கொண்ட பல கமிஷன்களில் இந்தியர் சிலர் அங்கம் பெற்றிருந்தனர். அவைகளால் இந்தியா பெற்ற நலன் என்னை? அவ்விந்தியர்கள் உயர்பதவி பெற்றதே விளைந்த பயன். இப்பொழுது ஒரு வேளை இந்தியர் சிலர் கமிஷனில் அங்கம் பெறின், அவர் சில மாகாணங்களில் கவர்னர் பதவியோ அல்லது வேறு எப்பதவியோ பெறுதலல்லாது வேறு பயன் ஒன்றும் விளையப் போவதில்லை. தொழிற்கட்சித் தலைவர் நோக்கத்துக்கும், கன்ஸர்வேடிவ் கட்சி நோக்கத்துக்கும் என்ன வேற்றுமை என்பது எமக்கு விளங்கவில்லை. ஆகவே இங்கிலாந்தில் எழுந்துள்ள பகிஷ்கார முழக்கம் வெறுஞ் சூழ்ச்சியேயாகும் அவ்வுரு வெளி கண்டு இந்தியர் ஏமாறலாகாது.

⁂ ⁂ ⁂

இந்தியாவில் மிக உரமாக ராயல் கமிஷன பகிஷ்காரப் பிரசாரஞ் செய்யப்படுகிறது. "பகிஷ்காரம்" என்னுஞ் சொல்லைக் கேட்டுச் சகோதரர்கள் ஏமாறலாகாது என்று எச்சரிக்கை வழங்குகிறோம். என்னை?

பகிஷ்காரத்தில் ஒரு சாரார் இந்தியத் தேசியக் கோரிக்கையை வலியுறுத்தி ராயல் கமிஷன் பகிஷ்காரஞ் சொல்கிறார் மற்றொரு சாரார் ராயல் கமிஷனில் இந்தியரில்லை என்று பகிஷ்காரக் கிளர்ச்சி செய்கிறார். கமிஷனில் இரண்டோர் இந்தியர் சேர்க்கப்பட்டதும் இவர்கள் பகிஷ்காரம் ஒத்துழைப்பாக மாறிவிடும். எனவே பின்னவர் பகிஷ்காரக் கிளர்ச்சியில் சூழ்ச்சி நிலவலை நேயர்கள் கவனிப்பார்களாக.

⁂ ⁂ ⁂

இந்தியாவில் அதிகாரவர்க்கத்துக்குத் துணை போக மிதவாதக் கூட்டமொன்று ஏற்பட்டிருக்கிறது. அக்கூட்டத்தின் நோக்கம் பதவி பெறல் வேண்டுமென்பதே. அவ்வினத் தவருட் சேர்ந்த சிலரும் இப்பொழுது பகிஷ்காரக் கூச்சலிடுகிறார். அக்கூச்சல் தொழிற்கட்சியார் வாயிலாக இங்கிலாந்தில் ஒலிக்கிறது. சர் சப்ரு, சர் சிவசாமி ஐயர் முதலியோர் தாங்களோ தங்கள் கட்சியாரோ கமிஷனில் அங்கம் பெறவில்லையே என்னுங் கருத்துடன பகிஷ்காரத்துறை நண்ணியிருக்கிறாரா அல்லது இந்தியத் தேசீயக் கோரிக்கையைக் குறிக்கொண்டு அத்துறை புகுந்துள்ளாரா என்று ஆராய்தல் வேண்டும்.

முதன் முறை நாம் ராயல் கமிஷன் பகிஷ்காரத்தைப்பற்றி எழுதியபோது பகிஷ்காரம் ஒத்துழையாமையின் ஒரு கூறு எனறும், முன்னை ஒத்துழையாமையைக் குறை கூறிக்கொண்டிருந்த பலர் பழைய பிழைபாட்டை யுணர்ந்து மனந்திரும்பிப் பகிஷ்காரத்தில் இறங்கல் வேண்டுமெனறுங் குறித்திருந்தது நேயர்கட்குத் தெரியும். இப்பொழுது மனந்திரும்பாது சிலர் பகிஷ்காரப் பிரசாரஞ் செய்து வருகிறார்.

⁂ ⁂ ⁂

சர் சாப்ரு போன்றார் அங்கம் பெற நேரின், அப்பொழுது வடநாட்டு முஸ்லீம்கள் பகிஷ்கார முழக்கஞ் செய்வார்கள். ஜனாப் ஜின்னா போன்றார் அங்கம் பெறின், வடநாட்டு ஹிந்துக்கள் பகிஷ்காரக் கிளர்ச்சி செய்வார்கள். சர். சி. பி. ராமசாமி ஐயர் போன்றார் அங்கம் பெறின் ஜஸ்டிஸ் கட்சியாரும், பனகால் ராஜா போன்றார் அங்கம் பெறின் வகுப்புவாத பிராமணரும் பகிஷ்காரத்தில் புகுவர். எல்லா வகுப்பாரிலும் ஒவ்வொருவர் கமிஷனில் அங்கம்பெறின், ஒத்துழைப்பு நிகழும் போலும்! இந்தியாவிலுள்ள எல்லா வகுப்பாரும் கமிஷனில் அங்கம்பெறின் அக்கமிஷன் தொகை இங்கிலாந்தின் ஜனத்தொகை அளவாகும். இன்று ராயல் கமிஷன் பகிஷ்காரமாயிருப்பது நாளை வெவ்வேறு பகிஷ்காரமாக முடியினும் முடியும்.

⁂ ⁂ ⁂

ராயல் கமிஷன் பகிஷ்காரத்தைப்பற்றி ஜனாப் ஜின்னா ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்; டாக்டர் பெசண்ட் அம்மையார் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். இரண்டிலுமுள்ள கைச்சாத்துகள் பல ஒருமைப்பாடுடையனவாக விருக்கின்றன. அவ்விரண்டுங் கருத்தில் ஒற்றுமை யுடையனவே. இந்தியரையும் கமிஷனில் சேர்த்துக் கொள்ளல் வேண்டுமென்றும், இல்லையேல் கமிஷன் பகிஷ்கரிக்கப்படுமென்றும் அவ்வறிக்கைகளில் குறிக்கப்பட்டிருக்கின்றன. இதைக்கொண்டு சட்டசபை பகிஷ்காரம் முதலியன நிகழ்த்தல் கூடாதென்பது அம்மையார் கருத்து.

⁂ ⁂ ⁂

காங்கரஸ் கட்சித்தலைவர்கள் நிலை என்னை என்று தெரிந்துகொள்ள விரும்புகிறோம். சிலர் பெசண்ட் அம்மையார் அறிக்கையில் கையெழுத்திட்டிருக்கிறார்; மந்திரிகள் எல்லாரும் பதவியினின்றும் விலகல் வேண்டுமென்கிறார்; காங்கிரஸ் சட்டசபை அங்கத்தவர் அனைவரும் வெளியேறல் வேண்டுமென்கிறார். பழைய ஒத்துழையாமை தியாகம் வேண்டியிருந்தமையால், அது தோல்வியுற்றதென்றும், இப்பகிஷ்காரத்துக்குத் தியாகம் வேண்டுவதில்லை என்றும் சொல்கிறார். இவருள் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரும் ஒருவர். இவரைப் பின்பற்றுவோர் பேச்சும் எழுத்தும் வேறு வழியில் நிற்கின்றன.

⁂ ⁂ ⁂

லார்ட் பார்க்கன் ஹெட் தற்போது உருக்கொண்டுள்ள கமிஷனில் கூட்டல் குறைத்தல் செய்யார். ஒரு வேளை இந்திய அரசாங்கத்தின் வலியுறுத்தல்மீது சில இந்தியர் சேர்க்கப்படுவரேல் அவர் வகுப்பு வாதம் வளரக்கூடிய முறையில் கமிஷனில் சேர்க்கப்படுவரென்பது உறுதி. ஆதலால் என் செய்வது? 'நவசக்தி.

## "சுதேசமித்திரனும்" ஸ்ரீமான் கிருஷ்ணமாச்சாரியாரும்.

பத்திரிகைகள் பொதுவாக சமூக வளர்ச்சிக்கும், ஒற்றுமைக்கும், தேச முன்னேற்றத்திற்கும் வழிகாட்டியாக நின்று பாமர ஜனங்களுக்கு அறிவை புகட்டுவதற்காக ஏற்பட்டவை. ஆனால் இப்பொழுது சில பத்திரிகைகள் ஜாதி வித்தியாசங்களை நிலைநாட்டவும் ஏதோ ஒரு சமூகத்தினர் செய்யும் அட்டூழியங்களையும்- அக்கிரமங்களையும் மறைத்து வைப்பதற்காகவும் உழைக்கின்றன. சில தலைவர்கள் அப்பத்திரிகைகளை ஆதரிப்பதுமல்லாமல் அக்கொள்கைகளுக்கு இணங்கியும் விடுகிறார்கள். இவர்களெல்லாம் குலத்தைக்கெடுக்க வந்த கோடாரிக்காம்புகளேயன்றி வேறல்ல.

இப்பொழுது நம் இந்தியா, அதிலும் தென் பாகம் இருக்கப்பட்ட நிலைமை மிகவும் கேவலமானது. ஜாதி வித்தியாசத்தை ஒழித்து சமூகத்திற்கு சுயமரியாதை உண்டாக்கவேண்டுமென்றும், விபசாரம் கள்ளுண்ணல் முதலிய கெட்ட வழக்கங்களை ஒழிக்கவேண்டு மென்றும், பெரும்பாலோரை ஏமாற்றுகிற பிராமணீய புரோகிதத்தை நீக்கவேண்டுமென்றும் பலமாக உழைத்து வருகின்றார் ஒரு சாரார். இவைகளை ஒழிப்பதினால் சமூகங்களுக்கும் தேசத்திற்கும் நன்மையா தீமையா என்பதை இதை வாசிப்போரே யூகித்துக் கொள்ளுங்கள். இதை விட்டு ஒரு சிலருடைய முன்னேற்றத்திற்காக, அவர்கள், சுயநலத்தோடு ஜாதி வித்தியாசத்தை ஒழிக்கக்கூடாது, விபசாரம் செய்யவேண்டும், கள் குடிக்கவேண்டும், பெரும்பாலோர் அவர்களுக்கு அடிமையாகவிருக்கவேண்டும் என்று பிதற்றுவார்களேயானால், அவர்கள் கூற்றுக்கு யாரே செவிசாய்ப்பர்? இந்த பித்தலாட்டங்களுக்கெல்லாம் அறிவுள்ள ஒருவரும் மனம் திரும்பமாட்டார் மனக்கொதிப்பேயன்றி வேறல்ல! இவ்விஷயங்களில் ஈடுபடும் தலைவர்களெல்லாம் உண்மை தலைவர்களல்ல நம் தலைக்கு வாள்களே யாவார்கள்.

சென்ற 31—10—27 திங்கள் கிழமை 'சுதேசமித்திரனில்' 'ஹிந்து கோவில்கள் அவற்றின் அவசியம்' என்ற தலையங்கத்தின் கீழ் ஒரு வியாசம் வெளி வந்திருக்கிறது. அது சாஸ்திரங்களை கற்றுணர்ந்த மேதாவியாகிய காசி ஸ்ரீமான் கிருஷ்ணமாச்சாரியாரால் சென்னை, திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல் மண்டபத்தில் செய்த பிரசங்கத்தின் முக்கியாம்சமாம். நம் மாகாணத்தில் சாஸ்திரம் கற்றோர்கள் இல்லையென இவர் காசியிலிருந்து சாஸ்திர குப்பைகளை மூட்டை கட்டிக்கொண்டு இங்கு வந்தார் போலும். முதலாவதாக இவர் சாஸ்திரங்களை நாம் படிக்கவேண்டிய அவசியமுமில்லை. அதன்படி நாம் நடக்கவோ கடவுளை தரிசனம் செய்யவோ முன் வரவுமில்லை. அதனால் கடவுள் நமக்கு அநுக்கிரகமளியாதிருப்பாரானால் நாம் இந்தப் பிராமணீயக் கொடுமையைச் சகிப்பதைவிட நரகம் ஒன்று உண்டானால் அங்கே மனப்பூர்வமாய்ச் செல்லச் சித்தமாயிருக்கின்றோம். ஸ்ரீமான் ஆச்சாரியவர்களே உங்கள் சாஸ்திர மூட்டைகளை சென்னையில் அவிழ்க்கவேண்டாம் அவைகளை உங்கள் தலையிலேயே போட்டுகொண்டு காசி க்ஷேத்திரத்திலேயே கங்கா தீர்த்தத்தில் மூழ்குவீர்களேயானால் உங்கள் பாவங்களை மன்னிக்கப்படும். நீங்கள் கோவிலுக்குள் எல்லாரும் போகக்கூடாதென்றும், அவர்களுக்கு ஏற்பட்ட இடங்களில் நின்று தான் சுவாமி தரிசனம் செய்ய வேண்டுமென்றும், தாழ்ந்தவர்கள் என்று சொல்லப் பட்டவர்க்காக மத்திய விமானத்திலும், கோபுரத்திலும் சுவாமியின் விக்கிரஹம் அமைக்கப்பட்டிருப்பதாகவும் சொல்லுகின்றீர்கள். இந்தக் கோவில்களெல்லாம் யாருடைய மூதாதைகளின் பொருளைச்செலவு செய்து கட்டப்பட்டன? ஏ கபட பிராமணரே? எந்த விதத்தில் இந்தக் கோவில்களில் அன்னியநாட்டு ஆரியராகிய உங்களுக்கு ஆதிக்கம்உண்டு? நீங்கள் கூலிக்கு கோவிலில் வேலை செய்ய வந்தவர்கள் தானே மற்றுமுண்டா? நீங்கள் தாழ்ந்தவர்கள் என்று சொல்லப்பட்டவர்களைவிட எந்த அம்சத்தில் அதிகமாயிருக்கிறீர்கள்? நீங்கள் வயிற்றுச் சோற்றுக்குத் தானே கோவிலில் ஊழியம் செய்ய வந்தீர்கள்? பிச்சை எடுக்கும் தொழிலை மேற்கொண்டவர்களாயும் சுயநலப்பிரியர்களாயும் வஞ்சனை நிரம்பியவர்களாயும் உள்ள உங்களையன்றோ அந்த வெளியிடத்தில் நிறுத்தவேண்டும். உங்களுடைய அக்கிரமங்களையும் அட்டூழியங்களையும் பொறுமை என்னும் சாத்வீக குணத்தோடு பொறுத்து வந்த அந்த தாழ்ந்த வகுப்பார் என்று சொல்லப்பட்டவர்களல்லவா சுவாமியின் முன்னணியில் நின்று தரிசனம் செய்யவேண்டும். அவர்களன்றோ அந்த இடத்தில் நின்று சுவாமி தரிசனம் செய்ய தகுதியுள்ளவர்கள். மேலும் தீண்டாமையை சாஸ்திரங்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றனவென்று சொல்லுகிறீர்? எந்த சாஸ்திரத்தைஇதற்கு நீர் ஆதாரமாகக் கொண்டீர்? ஆனால் இதிலிருந்து சாஸ்திரங்களின் வாசனைகூட நீர் அறியீர் என்று நாம் திட்டமாகச் சொல்லுவோம். சாஸ்திரங்களை பிழைபற கற்க வேண்டுமானால் ஸ்ரீ கைவல்லிய சாமிகளை உமக்கு ஆசிரியராகக் கொள்ளும். இந்த பித்தலாட்டங்களை எல்லாம் அவர்கள் எடுத்து விடுவார்கள். அப்படியவர்களிடம் செல்ல உமக்குப் பிரியமில்லாவிட்டால் 6—11—27 ல் வெளியாயிருக்கும் "குடி அரசு" பத்திரிகையின் 2 வது பக்கத்தைப்பாரும். பிராமணீய சாஸ்திரங்களின் படியும் புராணங்களின் படியும ஜாதி வித்தியாசமில்லை என்பது வெள்ளிடை மலை போல் விளங்கும். இப்படிப் பிரசங்கங்களுக்கும் சாஸ்திர பூச்சாண்டிகளுக்கும் ஒருவரும் மயங்கமாட்டார்கள். உம்முடைய ஜாதி வித்தியாச பித்தலாட்டங்களை விட்டு விடும். பிராமணரல்லாதார்களே! கண் மூடித்தனமாக இன்னும் மூடக்கொள்கைகளை பின் பற்றவேண்டாம். உங்கள் அடிமை வாழ்வை நிலை நாட்ட வேண்டாம். சுயமரியாதையை அடைய முன் வாருங்கள். பிராமணீயத்தை ஒழியுங்கள்.

இதோடு 'சுதேசமித்திரன்' பத்திரிகையும் மேற்படி ஆச்சாரியாரின் பிரசங்கத்தை யாதொரு குறிப்பும் அதாவது கண்டனமுமெழுதாமல் பிரசுரம் செய்திருப்பதை நோக்குங்கால் அதன் சுய உருவம் வெளிப்படுவதை நாம் காணலாம். கண்டனம் எழுதாத முறையில் அந்த விஷயத்தை அப்பத்திரிகை ஆதரிப்பதாகவே நாம் கொள்ளவேண்டும். அப்படியாகின் அது தீண்டாமையை நிலை நிறுத்தவே உழைக்கின்றதாகயிருக்கின்றது என்பது தெளிவாகிறது. சுயமரியாதை உணர்ச்சியுள்ள எவரும் இதை ஆதரிக்க மாட்டார்கள் என்பது மிகையாகாது. இப்படி வியாசங்களை வெளியிடும் பத்திரிகைகளால் நாம் அடையும் பயன் என்ன? வேற்றுமையேயன்றி ஒற்றுமையல்ல. ஆனால் நம் சுயமரியாதையை நிலைநிறுத்த நமக்குஒற்றுமையன்றோ வேண்டும். ஆகையால் நாம் எப்பொழுதும் சுயமரியாதைக்கு வழிகாட்டியாக நிற்கும் 'குடி அரசு' 'திராவிடன்' 'நவசக்தி' 'தமிழ் நாடு' 'ஜஸ்டிஸ்' முதலிய எண்ணிறந்த பத்திரிகைகள் இருக்க, நம் அடிமைத்தனத்தை பலப்படுத்த உழைத்துவரும் 'சுதேசமித்திரன்' 'இந்து' முதலிய பத்திரிகைகளை ஏன் ஆதரிக்கவேண்டும். உங்களை சூத்திரன் என்று சொல்லிக்கொள்ளபிரியமில்லையாயின் அந்த பத்திரிகைகளை ஆதரிக்க வேண்டாம். அப்படிச் சொல்லிக்கொள்ளப் பிரியமிருந்தால் அவைகளை ஆதரியுங்கள். அல்லது விட்டு விடுங்கள். சுயமரியாதை உணர்ச்சியை உண்டாக்குகிற 'குடி அரசு' முதலிய பத்திரிகைகளைப் படித்து உங்கள் அடிமைத் தனத்தினின்று நீங்க வழியைத் தேடுங்கள்.

எல்லாம் வல்ல இறைவன் பிராமணீயத்தை ஒழித்து நமக்கு சுயமரியாதை யளிப்பாராக. கனகசபாபதி, செங்குளம்.

---

### மன்னார்குடி.

இவ்வூர் முனிசிபாலிட்டி நாமினேஷன் ஸ்தானங்களுக்கு மூவர் நியமிக்கப்பட்டதில் ஒருவர் தீண்டப்படாதவர் என தற்பொழுது வழங்கப்படும் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர். இந்த கிருஷ்ணஞ் சாம்பாரை இன்று கூடிய மீட்டிங்குக்கு அழைத்து செல்லும் பொழுது இந்நகர ஆதி திராவிடர்கள் இந்நகர முக்ய வீதிகளின் வழியாய் மேளதாளத்துடன் சுதந்திரக் கூத்தாடிச் சென்றனர். மத்தியில் சிலர் இவருக்கு பூமாலை போட்டு உபசரித்தனர். எங்கு பட்டுக்கோட்டை மாதிரி செய்து விடுவார்களோ என்று எண்ணிக்கொண்டிருந்தவர்கள் சுயமரியாதையுள்ள முனிசிபல் கவுன்சிலர்கள இவரை எதிர் கொண்டழைத்தது கண்டு மகிழ்வெய்தினார்கள். இவரை நியமிக்க முக்கிய காரணமாய் இருந்த டிப்டி கலெக்டர் மகா-ா-ஸ்ரீ பொன்னுசாமி பிள்ளையை எல்லாரும பாராட்டுகிறார்கள்.

ஒரு நிருபர்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி.)

காண்டங்களில்சொல்லப்பட்டிருக்கிறது.கள்ளைப் பற்றி நினைத்தால் ஆரிய வேதங்களையும் அதை சம்பந்தப்பட்டவர்களையும் முதல் முதல் தள்ள வேண்டும். துவார கையிலிருந்த யாதவர்கள் பிரயாசனுடைய விருந்துக்குப் போய் அளவிற்கு மிஞ்சி குடித்து ஒருவருக்கொருவர் சண்டை செய்து அதில் கிருஷ்ணனுடைய சாரதி கொல்லப்பட்டு கிருஷ்ணன் புல்லைப்பிடுங்கி செருப்பாக்கி எல்லாரையும் கொன்று அந்தச் சண்டையில் பிரத்தியுமன்னன் அனுருத்திரனும் கொல்லப்பட கிருஷ்ணன் கோபம் கொண்டு யாத வகுலத்தையே நாசமாக்கி காட்டிற்குப்போனார் என்ற கதையும் பாரதத்தில் படிக்கிறோம். ராமர் கிருஷ்ணன் கள்ளுண்டார்களென்று ராமாயண பாரதத்திலும் கதைகளில்லாமலில்லை. இன்னும் அநேக புராணங்களிலும் மதுவைக்குடித்து ஆடினதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களையும் இந்த புராணங்களையும் தள்ளி வைத்தவர்களில்லை. சங்கராச்சாரியாரும் தன் சிஷியனைப் பரிசோதிப்பதற்கு கள்குடித்ததாகக் கதைகள் சொல்லப்படுகின்றன. வைஷ்ணவத்தின் ஒரு பகுதிக்கு ஆசாரியரான வல்லபாச்சாரி மதம் எல்லா போக போக்கியங்களையும் அனுபவிப்பதே அதன் தத்துவம்.வல்லபாச்சாரியாருக்கு கிருஷ்ணரே இந்த மதசத்துவத்தை நேராக உபதேசித்ததாகச் சொல்லப்படுகிறது. இவர் விஜயநகரத்திற்கு வந்து அங்கிருந்த வித்வான்களை ஜெயித்து விஜயநகரத்து ராஜாவையும் தன் மதத்தில் சேர்த்துக்கொண்டார். உலக சுகம் அவர்களுக்குத் தள்ளுபடியில்லை. அந்த காலத்தில் தான் பாப்பார்களின் அதிக்கம் விஜயநகரத்தில் அதிகமாக விருந்தது.சைவர்களில் சில குடும்பத்திற்கு வைஷ்ணவ அய்யங்கார்கள் குருவானதும் இப்பொழுது பணம் வசூல் பண்ணுவதும் ஏற்பட்டது அந்தக்காலமே. மதக்கொடுமையால் அநேகரைத் தாழ்த்தினதும் அந்தக்காலமே. அந்தக் கொடுமையால் அநேகருடைய மனம் கெட்டு விஜயநகர ராஜ்ஜியத்தின் மேல் வெருப்புக் கொண்டிருந்தமையால் சத்துருக்களால் அழிக்கப்பட்டது. இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த ஒருவித்வான் 'பாப்பான் பெருத்து வடுகன் துரைத்தனம் பாழ்த்ததுவே' என்று பாடின காலமும் அதுவே. இப்பொழுது இந்த பெரிய கோவில்களிலுள்ள தென்ன மரங்களெல்லாம் கள்ளுக்கு விடப்பட்டு நித்தியம் கள் கோவில்களிலிருந்தே கடைக்குப் போகிறது. இந்த கோவிலைத் தள்ளினவர்களில்லை. இன்னும் சில கோவில்களிலுள்ள சித்தர்கள் போகர்கள் வயிரவர்கள் இவர்களுக்கு கள்ளும் கஞ்சாவும் பூஜையாக இருக்கின்றது. இன்னும் காடன், மாடன், கருப்பண்ணன், பொடியன், மதுரை வீரன், பேச்சிபிடாரி இன்னும் அநேக தெய்வங்களைப் பூஜை பண்ணும் உயர்ந்த இந்துக்கள் குடும்பங்களுமிருக்கின்றன. இதைவிட சக்தி வாதிமதத்தின் பூஜைக்குகள்ளேபிரதானம். இவர்களை யாரும் குற்றம் சொல்லுகிறவர்களில்லை. ஐந்து கோடி ரூபாய் கள்ளினால் வரும்படி. இத்தனையையும் குடிப்பவர்களைத் தள்ளிவைக்க வழியில்லை. கலால் மந்திரியிலிருந்து கலால் சேவகன் வரையிலும் சாராயம் காய்ச்சும் டிப்போ, அதைப்பற்றினவர்கள், அதைப்பரப்பும் பத்திரிகைகள், இத்தியாதிப் பேர்களில் யாரையாவது தள்ளவுமில்லை. சுவாமி, வேதம், கோவில், ஆசாரி அவதாரபுருடர்கள், ராஜதந்திரி, பெரிய ராஜ அதிகாரி இவர்களுக்கெல்லாம் கள்ளின் தர்க்கமே பிரதானமாயிருக்கையில் வீரம் நிறைந்த தமிழரான ஒரு கூட்டத்தார் பேரில் எல்லாப் பாரமும் போடுவதினால்தான் அவர்கள் மனம் புண்ணடைந்து நம்மை வெருத்து அன்னிய மதம்




நாலு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழநி சித்த வைத்திய சங்க அமைச்சர்!! தமிழ் சித்தவைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! முப்பு சேர்ந்த மருந்துகள்.

பழனி. சி. எம். சாமி **மகாவீரிய தங்கபஸ்பம்**

பச்சிலை மூலிகையினாலேயே நீற்றப்பட்டது. பெரியமஹானின் முறை. அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாக்கும் ,இல்வாழ்வில் அதிபுஷ்ப சுகம் தரும். வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, நீரழிவு, பவுத்திரம், மூலம் க்ஷயம், இருமல் கபக்கட்டு, குன்மம் முதலிய சகல வியாதிகளும் தீரும். 48 நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24 நாளைக்கு ரூ. 10.

நற்சாட்சி:—தங்கள் தங்கபஸ்பம் சாப்பிட்டதில் எனக்கிருந்த வாய்வு, வெட்டை பலக்குறைவு முதலியன நீங்கி அபார தாது புஷ்டி உண்டாயிருக்கிறது. இதன் பெருமையையெழுதமுடியாது இன்னும் மேற்படி தங்கபஸ்பம் ஒரு மண்டலத்திற்கு அனுப்பவும். வி. எம். வரதராஜப் பெருமாள்சாமி கவிராயர் பொள்ளாச்சி.

## குருஅப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேகவெளுப்பை மாற்றி ரத்தவிர்த்தியையும், தேக புஷ்டியையும், தரும். சகல மேகமும் க்ஷய ரோகமும் நீங்கும். தளுக்கற்றது 24 நாள் புட்டி 1-க்கு ரூ, 15. 48 நாள் புட்டி 1-க்கு ரூ. 30.

நற்சாட்சி:—நான் சிங்கப்பூரில் நீரழிவினால் அதிக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது தங்களுடைய குருஅப்ரேக் செந்தூரத்தை அனுபானத்துடன் சாப்பிட்டதில் என் வியாதி பூராவும் சொஸ்தமாயிற்று இது நீரழிவு வியாதிக்கு மிக உயர்ந்த மருந்தாய்தெரிகிறது. எனது சிநேகிதர் ஒருவருக்கு ஒரு புட்டி குருஅப்ரேக் செந்தூரமும் அனுபானமும் வி. பி. யில் அனுப்பகோருகிறேன். கா. முகம்மது அப்துல்காதர் காரைக்கால். 21—12—26.

## குருதாளகபஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு, இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சரி, 9-வித காசமும் அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூபா16.

நற்சாட்சி:— தங்கள் குருதாளகபஸ்பம் ஒரு மண்டலம் சாப்பிட்டதில் இருமல், ரத்த வாந்தி இளைப்புஇவைகள்குணமாயிருக்கிறது ஆர். கந்தையா நேட்டிவ் டாக்டர், பாயிண்டு பீட்ரோ சிலோன் 18—9—25.

எல்லா மருந்துகளுக்கும் வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்

## சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்

**C.மலையப்பசாமி.** நித்தியானந்த வைத்தியசாலை பழனி, S. I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:—முருகன் ஏஜன்ஸி43அரமனைக்காரத் தெரு ஜி.டி.சென்னை


## கிருஷ்ணகிரில் பார்ப்பனர்களின் கொடுங்கோன்மை.

இவ்வூர் காங்கிரஸ் சபையானது நெடு நாளாக அந்தணரின் அக்கிரம ஆட்சியிலிருந்து சிறிது நல்ல காலத்தினால் இப்பொழுதுபார்ப்பனரல்லாதார்களுடைய தலைமையில் வந்தமை சகிக்க முடியாமல் ஒரு குக்கிராமத்தில் பார்ப்பனர் வேறு சபைகள் ஏற்படுத்திக் கொண்டு கலவரம் செய்து வருகிறார்கள். உத்தியோக சாலைகளில் ஒன்றோ இரண்டோ பிள்ளையவர்களோ செட்டியார்களோ இருந்தால் அவர்களை நீக்க முயலுகிறார்கள். இதை யறிந்த பிள்ளையவர்கள் அந்த செய் நன்றி மறக்கும் அரககாதன்மையுள்ள வருக்கு செய்த பேருதவிகளை நினைத்து வருந்தினால் அற்பர் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறார்கள். பள்ளிக்கூடங்களிலும் உபாத்யாயர்களில் தப்பித்தவறி முதலியாரோ, கவுண்டரோ இருந்தால் அவர்களை எவ்விதத்திலாவது முயற்சித்து போய்விடுகிறார்கள். அதன் நஷ்டம் எவ்வளவு சக்தி தெரிகிறமோ அதைப்பொருத்திருக்கிறது நம்முயர்வு. பார்ப்பனரல்லாத போர்டு தலைவரைக் கொண்டே நீக்கி விடுகிறார்கள். "குடி அரசு" படிக்கும் மாணவர்களையும் இப்பாதக பண்டிதர்கள் நிறுத்தும்படி பயமுறுத்துதலோ வற்புறுத்துதலோ செய்கிறார்கள். இவ்வாறு கிருஷ்ணகிரி முழுவதும் பார்ப்பன அடிமைத்தனத்திலேயேகலங்குகிறது.காரணம். 100க்கு 95 பேர் பிராமணரல்லாதார் அடிமைத்தனத்துடன் வாழும் கிருஷ்ணகிரிக்கு நமது சுயமரியாதை வீரர்கள் அன்புகூர்ந்து இந்தப் பக்கங்களில் வந்து உற்சாகம் புகட்டாததே. இனிமேலாவது நமது தலைவர்கள் அதிகவேலை ஸ்திதியிலும் பார்ப்பன அடிமைத்தனத்திலும் உள்ள துரதிருஷ்ட கிருஷ்ணகிரிக்கு விஜயம் செய்து அவ்வூர் வாசிகளை சுயமரியாதையோடு வாழும் வண்ணம் சொற்பொழிவுபதேசங்கள் செய்யும்படி வேண்டுகிறோம். 'கண்டுகலங்கினவன்'

## சென்னை செனேட் சபைத்தேர்தல்.

சென்னை பல்கலைக்கழக (செனேட்) தேர்தலில் கோவை வைஸ்-சேர்மன் ஸ்ரீமான் வி.அருணாசலம்செட்டியார்அவர்கள்ஓர் அங்கத்தினராகதேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார் என்று ஒரு நிருபர் தெரிவிக்கிறார்.

# மின்சார ரசம்.

வேத அபூர்வமான மருந்து! ஆச்சரியகரமான குணம்!

இதற்கு இயற்கையாக ஒரு வித மின்சார சக்தியுண்டு.

உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம். பத்தியமில்லை. அநுபான மில்லை.

மின்சார ரசம் சகல வியாதிகளுக்கும் ஒரு பெரிய வரப்பிரசாதம் என்று அநுபவ சிந்தாந்தமாகி ஜனங்கள் தேர்ந்தெடுத்து கையாண்டு வரும் அமிர்த சஞ்சீவியாகும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம். மின்சார ரசம் கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியம் இராது. இது இவ்வுலகுக்குள் ஒப்புயர்வற்ற பரம ஔஷதமாகும். மனிதன் தலை முதல் கால்வரையில் வரும் சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்ற தென ஜகத் பிரசித்திபெற்றது. துளிகள் கணக்கில் உபயோகித்து. நிமிஷக் கணக்கில் குணமடையலாம். குழந்தைகள் முதல் வயோதிகர் வரையில் ஸ்த்ரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில் கிடையாது எவ்வித ஆபத்துக்கும் மின்சார ரசம் உதவும். உலகத்தின் நாலு திசைகளினின்றும் ஆயிரக்கணக்கான நற்சாட்சிப் பத்திரங்கள் வந்துகொண்டிருப்பதே இதற்கு போதிய சான்றாகும். இன்றைக்கே எழுதுங்கள். உங்களை ஆச்சரிய முறச்செய்யும் கைகண்ட மருந்து

REGISTERED TRADE MARK
MINSARA RASAM

ஒரு புட்டியின் விலை ரூபா இரண்டே. தபால் சார்ஜ் வேறு.

விலாசம்:—**மின்சார ரசம் கம்பெனி லிமிட்டெட், சேலம்**


## இலங்கை
### மருத்துவகுல சகோதரர்களுக்கு
## ஓர் வேண்டுகோள்.

நவம்பர்-மீ 24-உ வெளிவந்த "திராவிடன்" பத்திரிகையில் "மகாத்மா காந்தியும் இலங்கை மருத்துவகுலச் சங்கமும்" என்று தலைப்பகமிட்டு எழுதியிருந்ததில், மகாத்மா காந்தியவர்களை 15—11—27 ல் பேட்டி கண்டு 401 ரூபாய் பணப்பையை கதர் நிதிக்காக நன்கொடை யளித்தாகவும் காந்திமகான் அதைப்பெற்றுக்கொண்டு "உங்களின் குறைகள் என்ன இருக்கின்றதோ அதைச் சொல்லுங்கள்" என்று கேட்டதாகவும், அதற்கு ஸ்ரீமான் கணபதி சகோதரர்களும் சகாக்களும் தங்களின் தயவினால் எங்களுக்கு உலகில் யாதொரு குறைவுமில்லை. மேல் வகுப்பினர்கள் என்று செல்லிக்கொள்ளும் இந்துக்களில் சிலர் எங்களை ஆலயப் பிரவேசம் செய்ய மறுக்கின்றனர். இந்த ஒரு குறையை மட்டும் நிவர்த்தி செய்து வைப்பீர்களே யானால் போதுமானது" என்று கேட்டதாகவும் யெழுதியிருக்கும் வாசகத்தை படித்துப் பார்க்க ரொம்பவும் சந்தோஷமடைகிறோம். ஆனால், மகாத்மா காந்தியவர்கள் உங்களுக்குச் சொல்லியிருக்கும் பதிலை நோக்குங்கால் சரியல்ல வென்றும் நினைக்கவேண்டி யிருக்கின்றது. நீங்கள் வேண்டிக்கொண்டிருக்கும் ஆலயப் பிரவேசத்துக்கு வேண்டிய வழியைக் காட்டாமல் ஏதோ ஒரு கதையைச் சொல்லி கடவுள் உங்களைக் காப்பாற்றுவார் என்று பதில் சொல்லி முடித்திருக்கிறார். இதுதான் ஆலயப் பிரவேசத்திற்கு செல்லும் வழியா என்று யோசித்துப் பாருங்கள். அழுகிற பிள்ளைக்கு வாழைப்பழத்தை காண்பித்தது போல மகாத்மா காந்தியவர்கள் வருணாசிரம மூட்டையை தாங்கி நிற்கும் இக்காலத்தில் உங்களுக்கு ஆலயப் பிரவேசம் செய்ய உரிமை காட்டுவாரென்பது நாம் காணும் பகற் கனவேயாகும் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தற்காலம் உலகத்தில் ஆலயப் பிரவேசத்திற்காகவும் சுய மரியாதைக்காகவும் சமத்துவத்திற்காகவும் போராடிவரும் மாபெருந் தலைவர் வைக்கம் வீரர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களின் "குடி அரசு" பத்திரிகையையும் திருவாளர் ஜனக சங்கர கண்ணப்பர் அவர்களால் வெளிவரும் "திராவிடன் பத்திரிகையையும் ஆதரிப்பதுடன் திருவண்ணாமலை கோவில் வழக்கிற்காக நாம் ஒவ்வொருவரும் நம்மாலியன்ற பொருளுதவி செய்து வருவோமேயாகில் நாம் வருந்திக் கோரும் ஆலயப்பிரவேசம் கைகூடிவரும் என்பதை உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன், எல்லாம் வல்ல இறைவன் கருணைபுரிவாராக.

எஸ். பி. காத்தமுத்து மருத்துவன்,
சிங்கப்பூர் ஹேர்கட்டிங் சாலூன்,
ஈரோடு.

---

### நாடார் மஹாஜனங்களுக்கு அறிவிப்பு.

நமது சங்கத்திற்கு திரு. கெ. எஸ். அருணகிரி நாடார் அவர்கள் கௌரவ டிராவிலிங் ஏஜண்டாக நியமனம் பெற்றுள்ளார்.

அவர், முதலில் திருநெல்வேலி ஜில்லா அம்பா சமுத்திரம் தாலூகாவில் சங்கத்தின் நோக்கங்களைப் பரவச்செய்வதற்காக சுற்றுப்பிரயாணம் செய்வார். அபிமானிகள் அவருடன் ஒத்துழைக்கக் கோருகிறோம்.

காரியதரிசிகள்,
நாடார் மகாஜன சங்கம், மதுரை.


சிங்கப்பூரில்
## "குடி அரசு"
கிடைக்கும் இடம்:—

1 பிரிட்டிஷ் & அமெரிக்கன் நியூஸ் ஏஜென்சி,
நெ. 6 பேட்டரி ரோட்டு,
சிங்கப்பூர்.

2 ஜி. எஸ். நாயுடு அவர்கள்
105 மார்கட் வீதி,
சிங்கப்பூர்.

இனம்! இனம்!! இனம்!!!

## ஸ்ரீ கிருஷ்ணானந்த கௌதம பரிமள சாலை.

1 வீரியவிர்த்தி லேகியம். 2 நறுமண அரக்கிரை விதைத்தைலம் 3 நறுமண சந்தனாதித் தைலம். 4 அருமையான கல்நார் பற்பொடி 5 அத்தர் ஊதுபத்தி தினுசுகள்

இன்னும் அநேக விதமான லேகியங்கள், தைலங்கள், நறுமண வாசனைச் சாமான்கள் மிகக் குறைந்த விலைக்கு எங்களிடம் கிடைக்கும். ஒரு முறை வாங்கினால் உண்மை விளங்கும். விபரமான கேட்லாக் இனம். ஏஜெண்டுகள்தேவை. தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

கிருஷ்ணானந்த கௌதம பரிமள சாலை
வலங்கமான், தஞ்சை ஜில்லா.

---

அநேக காக்ஷிகளில், பொன், வெள்ளி மெடல் பெற்ற

### விதைகள், செடிகள்.

3-வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 3 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுபழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி. கேட்லாக் இனம், இங்கிலீஷ் காய்கரி, புஷ்ப விதைகள் :—

| | |
|---|---|
| 20 சாம்பிள் பாக்கெட் | ரூ. 2—0—0 |
| 10 ,, ,, | ரூ. 1—4—0 |
| நாட்டுக் காய்கறி 20 | ரூ. 2—8—0 |

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட்னர்சரி தோட்டம், சேலம்.


---

### ஏமாற்றமா?

1926-வரு செப்டம்பர்-மீ சுதேசமித்திரனில் பிரசுரித்திருந்த தேசியப் பாக்கள் போட்டி என்ற விஷயமாய் என்ன முடிவாயிற்றென்று இதுவரை தெரிவிக்காமலிருப்பதைக் கவனித்தால் ஏமாற்றமா? என்று சந்தேகம் உண்டாகிறது. பதில் எதிர்பார்க்க விரும்பும்.

யதார்த்த வசனி.

அநேக ஏராளமான நற்சாட்சிகளும், தங்கமெடல்களும், ஏராளமான பரிசுகளும் பெற்று, நிராசித்த கைவிடப்பட்ட வியாதிகளை எல்லாம் சௌக்கியம் செய்த நமது முதல்தர தேவ ஔஷதங்கள். உலக மெங்கும் புகழ்ந்து கொண்டாடி வரப்படுகிறது.



டிரேட் மார்க்

**தாது புஷ்டிக்கு அசல் தங்க பற்பம்:**— அதிக வயதாலும், பலஹீனத்தாலும், பலவித துர் அப்பியாசத்தாலும், சோர்ந்து போனதும் இழந்து போனதுமான ஆண்மையைக் கெட்டிப்படுத்தி, சப்த தாதுக்களுக்கும் வலுக் கொடுத்து இல்வாழ்க்கையில் அதிக இன்பத்தை உண்டு பண்ணி, புத்திர சந்தானத்தைக் கொடுப்பதில இதற்கு மிஞ்சிய ஔஷதம் இல்லை. பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம். தங்க பற்பத்தை மகா வில்வாதி லேகியத்துடன் அனுபானமாகச் சேர்த்துச் சாப்பிடவேண்டும். முதல் நெ. பற்பம் 50 நாள் மருந்து விலை ரூ 36 [2-ம் நெ. பற்பம் 50 நாள் மருந்து விலை ரூ 20.] அனுபானத்துக்கு மகா வில்வாதி லேகியம் 1 டின் விலை ரூபாய் 10.

**அசல் வெள்ளி பற்பம்:**—(உத்திரவாதம்) நமது அசல் வெள்ளி பற்பம் நாட்பட்ட அஸ்தி வெட்டை, நீரோடு இந்திரியம் உடைந்து விழுதல், அதில் ஈ, எறும்பு மொய்த்தல். சிணுக்கிருமல், தும்மல் விழுதல், வெட்டை வாய்வு, இடுப்பில் வாய்வு தங்கியிருத்தல், திரேகம் இளைத்து சதா ஜுரம்போல் சூடுதாங்கி யிருத்தல், கால், கை, கண் முதலான இடங்களில் எரிச்சல் உண்டாகி தலைமாற்றி சுற்றல் இவைகள் கண்டிப்பாய் நிவர்த்தியாகும். திரேகத்திற்கு நல்ல பலத்தையும் தாது புஷ்டியையும், நல்ல இரத்த ஓட்டத்தையும் உண்டுபண்ணுவதில் இதற்கு நிகரான மருந்துகள் கிடையாது. இதை மதனகாமேஸ்வர லேகிய அனுபானத்தில் சாப்பிடவேண்டும். ஒரு மண்டலம் (48 நாள்) உபயோகிக்கக்கூடிய பற்பம் விலை ரூ 15 [அரை மண்டலம் 24 நாள்] உபயோகிக்கக்கூடிய பற்பம் விலை ரூபாய் 7—8—0, ஒரு மண்டல மதனகாமேஸ்வரி லேகியம் 2 டின் விலை ரூ 16—0—0 (தபால் சார்ஜ் பிரத்தியேகம்.)

**நீரழிவுக்கு அப்ரேக் செந்தூரம்:**—வயது 40க்கு மேல் வாழ்க்கையுள்ள கருவி கரணங்கள் சற்று இளகும். அப்போது மூத்திரப்பை பலனற்று ஜனேந்திரியம் நீற்றுப்போய் இன்னும் பல காரணங்களால் மூத்திரப் பெருக்கு உண்டாகி சரீரம் மெலிந்து ஜீவனை விட்டு விட வேண்டியிருக்கும் நிலைமையில் நீரழிவு வியாதியினால் இறந்துபோகிறார்கள் என்கிறார்கள். நீரழிவுக்கு நமது அப்ரேக்கு செந்தூரம் சாப்பிட்டால் அது குண்டிக்காய் மூத்திரப்பை முதலிய கருவிகளுக்குப் பலம் கொடுத்து ரட்சிப்பதுடன் நீரழிவினால் ஏற்படும் சகல கோளாறுகளையும் நிவர்த்தி செய்து நல்ல மேனியை உண்டுபண்ணி சந்தோஷத்தில் வைத்து வளர்த்தும் அதிமதுரப்பால் ரசாயனத்தில் சாப்பிடவேண்டும். 24 நாள் மருந்து [அனுபான ரஸாயனத்துடன்] விலை ரூ 16.

**தாளக பற்பம்:**—நாட்பட்ட காசம், இருமல், க்ஷயம் ஈளை, கோழை, கஷ்ட சுவாசம் முதலிய ரோகங்களை வெகுசீக்கிரத்தில் குணப்படுத்தும். முதல் நெ. பற்பம் புட்டி 1 க்கு விலை ரூ 7—0—0. அனுபானம் லேகியம், கண்டங்கத்தரி அல்லது தூதுவளை ரஸாயனம், 10 நாளைக்கு விலை ரூ. 3—8—0 தபால் செலவு வேறு.

நற்சாட்சி.— பழனி சத்குரு மகாதேவ ஸ்வாமிகள் சித்த ஆயுள் வேத பண்டிதர் ஸ்வாமிகள் தயார் செய்த தங்கம், தாம்பரம், வெள்ளி, பவளம் முத்து, அயபற்ப செந்தூரங்கள் மிகவும் உயர்ந்த முறைகளால் தயார் செய்யப்படுகின்றன. சுமார் 1 வருஷ காலமாக என் பேத்திக்கு இருமல் வியாதி கண்டு கபத்தினாலும் சுவாசத்தினாலும் கஷ்டப்பட்டும் அநேக டாக்டர்களால் கைவிடப்பட்ட வியாதியை ஸ்வாமிகள் பிறர் ஆச்சரியப்படத்தக்க விதமாய் சௌக்கியம் செய்து விட்டார். இவருடைய அபார சக்தியை பொது ஜனங்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்வதில் மிகவும் சந்தோஷமுள்ளவனாய் இருக்கிறேன்.
எல். கல்யாணராமய்யர், ரிடயர்டு தாசில்தார் அண்டு சிவகிரி திவான்.

**நாக பற்பம்:**— மூல சம்பந்தமான எவ்வித வியாதியாயிருந்தாலும் சரி வெகு சீக்கிரத்தில் குணப்படுத்தும். ஆபரேஷன் வேண்டியதில்லை பெருமுறை மருந்து முதல் நெ. பற்பம் புட்டி 1 க்கு விலை ரூ 10. [தபால் கூலி வேறு]

நற்சாட்சி:— பழனி வக்கீல் மகா-ள-ள-ஸ்ரீ வி. கோபால்சாமி அய்யர் எழுதியிருக்கிறதை கவனியுங்கள். ஆயிரக்கணக்கான ஜனங்கள் "பழனி சதானந்த மெடிக்கல் ஹால்" ஸ்ரீமான் சற்குரு மகாதேவ ஸ்வாமிகள் தாம்பிர பற்பத்தாலும் மற்றும் அனேக பற்பமுறை, லேகியபோக்கு, செந்தூர வைப்பு, தைலதினுசு இவைகளால் பலவிதமான குஷ்டரோகங்கள் இன்னும் அநேக ரோகங்கள் சொஸ்தப்பட்டு வருவதும், ஆண்டிப்பட்டி ஜமீன்தார் ஸ்ரீமான் ஆர். எம்.சிடி.பெத்தாச்சி செட்டியார் அவர்கள், விசாகப்பட்டணம் மகாராணி அம்மை Ceylon Supreme Court Sir Kumarasami Mudalar Avl K. C. I. E. Ceylon ராமாலாலா தத்துப் புத்திரர், கனகசபை மகாராஜா அவர்கள். சிவகிரி திவான் ஸ்ரீமான் கல்யாணராமய்யர் அவர்கள், பென்ஷன் தாசில்தார். காரத் தொழுவு (Land Lord) சுப்பம்மாள் இவர்களால் கொடுக்கப்பட்ட தங்க மெடல், மரகத மெடல் முதலிய வைகள் பெற்றிருப்பது நான் நேரில் அறிந்த விஷயம். எவ்வித ரோகஸ்தரும் தாமதம் தாழ்வு அன்னியில் ஸ்வாமிகள் அவர்களிடம் குணம் பெற்றுக் கொள்ள விரும்பி என் அபிப்பிராயத்தை வெளியிடுகிறேன்.
(ஒப்பம்) வி. கோபாலசாமி அய்யர் வக்கீல் பழனி.

நமது தாம்பர பற்பத்தின் விளம்பரத்தை அடுத்தவாரம் பிரசுரமாகும் பத்திரிகையில் பார்க்கவும். விவரமான கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

மலாய் நாட்டிலுள்ள நண்பர்கள் மருந்துக்கு ஆர்டர் செய்யும்போது முன் பணம் ரூ. 5 அனுப்பவும்.

தந்தி விலாசம்:— "சற்குரு" பழனி — Tel.—address "Sarguru" Palni

## ஸ்ரீமத் சற்குரு மகாதேவ ஸ்வாமிகள்.

சதானந்த மெடிகல் ஹால், பழனி. மதுரை ஜில்லா, தென்னிந்தியா.


### மதராஸ் சட்ட அண்டு கல்வி இலாகா அறிக்கை.

இரண்டாவது ஏகாதிபத்ய சித்திரப் பொருட்காட்சி வருகிற 1928 ஆம் வருஷம் ஏப்ரல் மே ஜூன் மாதங்களில் லண்டன் இம்பீரியல் இன்ஸ்டிடியூட் சித்ரப் பொருட் காட்சி பண்டபத்தில் நடைபெறும். இந்தியாவிலிருந்து அனுப்பப்படவேண்டிய 16 சித்திரக் காட்சி பொருட்கள் சர் ஜான் மார்ஷல் கே. டி., சி. ஐ. இ. அவர்களைத் தலைமையாகக்கொண்ட இந்திய கலா ஞானக் கமிட்டியால் தேர்ந்தெடுக்கப்படும் காட்சிக்காக பொருள்கள் அனுப்ப விருப்புவோர் "கவர்மெண்ட் காரியதரிசி, சட்ட இலாகா, செண்ட் ஜார்ஜ் கோட்டை மதராஸ்" என்ற விலாசத்திற்கு எழுதி முழு விபரமும் தெரிந்து கொள்ளலாம்.
பி. சீதாராமய்யா, கவர்மெண்ட் காரியதரிசி.

நமது 'குடி அரசு' பத்திரிகையின்
விருது நகர் ஏஜண்டு,

விருதுநகர் புக்டெப்போ ஸ்ரீமான் பி. பழனிக்குமார் பிள்ளை அவர்களை நமது ஏஜெண்டாக ஏற்படுத்தியிருப்பதால் சந்தாதாரர்கள் சந்தா பாக்கிகளையும், புதிய சந்தாவையும் அவரிடமே கொடுத்து நமது ஆபீஸ் அச்சு ரசீது பெற்றுக்கொள்ளலாம்.
மானேஜர்.

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.